
அக்டோபர் 2022 October | இதழ் 380 ISSUE

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991




Premier Canadian Tamil Journal


இழப்பு


மறைவு


பதவியேற்பு


'விழா நாகரிகம்' எனும் நூல் வெளிவரவேண்டும்


பரத அரங்கேற்றம்

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

32வது ஆண்டில் 32nd Year

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*

# கானல்நீராகுமா?

ஆலயங்களில் மகோற்சவம் வருடாந்தம் நடைபெறும். இதனை பெருந்திருவிழா என்றும் பொதுவாக அழைப்பர்.

பொநலவாய நாடுகள் மாநாடு இரண்டாண்டுக்கு ஒரு தடவை நடைபெறும். முடியாட்சியின் தலைமையில் ஞாபகத்துக்காக ஓர் ஒளிப்படம் எடுத்துவிட்டு கூடிக்கலைவது இதன் வழக்கம்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நான்காண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும். இதற்காக வீரர்கள் தொடர்ந்து தம்மைத் தயார்படுத்துவர்.

மனித உரிமைப் பேரவை ஒவ்வொரு வருடமும் மூன்று தடவைகள் கூடுகிறது. நாற்பத்தேழு நாடுகளின் பிரதிநிதிகள் தமக்குள்ள வாக்குப் பலத்தால் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுப் போவர்.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் உறைநிலைக்குச் சென்ற பின்னர் இலங்கைக்கு ஜெனிவா தங்குமடமாகி விட்டது. முள்ளிவாய்க்காலுக்கு முன்னைய முப்பது வருடங்கள் பலமாக இருந்த இயக்க அரசியலில் காணமுடியாத தீர்வை, இணக்க அரசியலில் மாற்றும் சாதனையை ஏற்படுத்த ஜெனிவாவில் சில நாடுகள் முனைகின்றன.

இதே நாடுகளே 'பயங்கரவாத ஒழிப்பு' என்ற பெயரில் இலங்கை அரசுக்கு தாராள உதவிகளை வழங்கி மனித உரிமை மீறல்களை உச்சத்துக்கு தள்ளிச்சென்று தமிழினப் படுகொலை நிகழ இணங்கிப் போனவை என்பதை மீள நினைவுக்குட்படுத்தினால், ஆழமான நெடுமூச்சுத்தான் பதிலாக வரும்.

கடந்த பன்னிரண்டு வருடங்களாக அதே நாடுகளே நீதி விசாரணை, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்று காலத்தை இழுத்துச் சென்று தமிழர்களை அலைக்கழிக்கின்றன.

2009ல் ஐ.நா. செயலாளராகவிருந்த பான் கீ மூன் மேற்கொண்ட களவிஜயத்தின் பின்னர் அவரும் இலங்கை ஜனாதிபதியாகவிருந்த மகிந்த ராஜபக்சவும் விடுத்த பொறுப்புக்கூறலுக்கான நம்பிக்கை தரும் கூட்டறிக்கை செல்லாக்காசாகி விட்டது. அதன் பின்னர் ஆறு தீர்மானங்கள் ஜெனிவாவில் நிறைவேறின. இறுதியாக வந்த 46:1 தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணை வழங்கி நம்பிக்கை ஊட்டியதாயினும் அதுவும் ஏமாற்றத்தை அளித்தது.

கடந்த மாதம் ஆரம்பமான கூட்டம் 50:1 தீர்மானத்தை முன்மொழிந்துள்ளது. இதுவரை தயாரிக்கப்பட்ட இரண்டு வரைபுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நீர்த்துப் போனதாகவுள்ளது. தமிழர் தரப்பு முன்வைத்த கோரிக்கைகள் எதிர்பார்க்கும் விமோசனங்கள் எதனையும் காணவில்லை.

புதிதாக வரவுள்ள 50:1 தீர்மானம் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசத்தைக் கொடுக்கிறது. இது 2024ல் முடிய இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் வரும். அதன் பின்னர் மேலும் தீர்மானங்கள் தொடரும்.

காலத்தை நம்பியே ஏமாறும் ஈழத்தமிழருக்கு ஜெனிவா என்பது இறுதியில் கானல்நீராகுமா?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

E-mail
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website
www.tamilsinformation.info

# அண்ணனும் தம்பியும் நேருக்கு நேராக மேயர் போட்டியில்!




இந்த மாதம் நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில், போர்ட் கொல்போர்ன் நகரசபை பலரது பார்வையையும் பெற்றுள்ளது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரு பிள்ளைகள் - இவர்கள் அண்ணனும் தம்பியும் இந்த நகரசபைக்கான மேயர் போட்டியில் நேருக்கு நேராக களம் இறங்கியுள்ளனர். இப்போட்டியில் இவர்கள் மட்டுமே இறங்கியுள்ளனர்.

இந்த நகரசபையின் மேயராக பல வருடங்கள் பதவியில் இருந்து வரும் பில் ஸ்டீல் இம்முறையும் போட்டியிடுகிறார். நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் கடைசி நாளான ஆகஸ்ட் 19ம் திகதிக்கு முதல் நாள் வரை இவர் மட்டுமே தாக்கல் செய்திருந்தார். இதனால் இவர் போட்டியின்றி மேயராகத் தெரிவாகும் வாய்ப்பு இருந்தது.

ஆனால், இறுதி நாளன்று இவரது சகோதரரான சார்ள்ஸ் ஸ்ரீல் திடீரென போட்டியில் குதித்து, மேயர் தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி வாக்காளர்களுக்கு அதிரடியை ஏற்படுத்தினார்.

இரண்டு சகோதரர்களும் கடந்த முப்பது வருடங்களாக ஒருவரோடு ஒருவர் பேசுவதில்லை. இதனால் தமக்குப் போட்டியாக தமது சகோதரரே களம் இறங்குவார் என்பதை பில் ஸ்ரீல் நினைத்திருக்கவில்லை.

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் - அதற்கு ஆரோக்கியமான போட்டி தேர்தலுக்கு அவசியம் எனக்கூறும் சார்ள்ஸ் ஸ்ரீல், தாம் போட்டியிடுவதால் தமது சகோதரர் மகிழ்ச்சியடைய மாட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

# ரொறன்ரோவில் சுமார் 50 வீதமாக சிறுபான்மையினர் வாழும்போதிலும் தேர்தலில் தோல்வியடைவது ஏன்?

ஒன்ராறியோ மாகாணத்தின் 444 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் மற்றும் பாடசாலைகளுக்குமான தேர்தல் இந்த மாதம் 24ம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான முற்கூட்டிய வாக்களிப்பு 7ம் திகதி முதல் 14ம் திகதி வரை காலை 10:00 மணியிலிருந்து மாலை 7:00 மணிவரை இடம்பெறும்.

தேர்தல் நாள் வாக்களிப்பு காலை 10:00 மணி முதல் இரவு 8:00 மணிவரை இடம்பெறும். ரொறன்ரோவிலும் மற்றும் தமிழர் அதிகமாக வாழும் மார்க்கம், மிஸிஸாகா, பிராம்ரன், பிக்கரிங், ஏஜக்ஸ் உட்பட்ட யோர்க், டூர்ஹம், பீல் பிரதேசங்களில் இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க சிலர் போட்டியிடுகின்றனர்.

கொரோனா தாக்கத்திலிருந்து மக்கள் விடுபடாத நிலை, பொருளாதார நெருக்கடி, சமூக ஊடாட்டக் குறைவு, குடும்ப உறவுகள் உபாதை மற்றும் இழப்புகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் இந்தத் தேர்தலுக்கான உற்சாகமும் பரப்புரையும் குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன், பல வீடுகளின் கதவுகள் மூடப்பட்டிருப்பது, வீடுகளின் முன்வாசலில் பொருத்தப்பட்டிருக்கும் கமரா வழியாக முன்னால் வந்திருப்பவர்களை கண்காணிப்பது போன்ற காரணங்களால் தேர்தல் வேட்பாளர்களும் அவர்களுக்கான பரப்புரை செய்பவர்களும் தொலைபேசி வழியையே கூடுதலாக நம்பியுள்ளனர். இதனால் இத்தேர்தலில் வாக்களிப்பு வீதம் வெகுவாகக் குறையுமென எதிர்வு கூறப்படுகிறது.

ரொறன்ரோ நகரத்தைப் பொறுத்த மட்டில் 25 தேர்தல் வட்டாரங்கள் உள்ளன. இங்கு வசிப்பவர்களில் 49 வீதத்துக்கும் அதிகமானவர்கள் சிறுபான்மையினர். கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 13 வீதமானோர் தெற்காசியர்கள். இதற்குள் இலங்கையரும் அடங்குவர். 11 வீதமானவர்கள் சீனர்களாகவும், 9 வீதமானவர்கள் கறுப்பினத்தவர்களாகவும் உள்ளனர். மேலும் சுமார் 16 வீதமானோர் வேறு சிறுபான்மை இனத்தவர்கள்.

ரொறன்ரோ பலவின மக்களின் அடையாளமென கூறப்பட்டு வந்தாலும் எந்தவொரு தேர்தலிலும் அதனை வெளிப்படுத்தும் வகையில் வெற்றி முடிவுகள் அமைவதில்லை. இதற்கு உதாரணமாக, தமிழர் சமூகத்தையே எடுத்துக் கொள்ளலாம். ரொறன்ரோ நகர எல்லைக்குள்ளிருந்து நாடாளுமன்றத்துக்கு ஒருவரும், ஒன்ராறியோ மாகாண சபைக்கு ஒருவரும் தெரிவு செய்யப்பட்ட போதிலும், ரொறன்ரோ நகரசபைக்கு ஒருவர்கூட இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது.

2017 பெப்ரவரியில் ஸ்காபரோ றூஜ்பார்க் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தலில் நீதன் சண் வெற்றிபெற்று 2018 டிசம்பர் வரை ரொறன்ரோ நகரசபை உறுப்பினராக இருந்தார். ரொறன்ரோவின் வரலாற்றிலேயே இப்பதவியைப் பெற்ற ஒரேயொரு தமிழர் இவரே. ஆனால், 2018ல் இடம்பெற்ற நகரசபைத் தேர்தலில் 154 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

ரொறன்ரோ நகரத்துள் ஸகாபரோ றூஜ்பார்க் தொகுதியே தமிழர் அதிகமாக வசிக்கும் இடம். இங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஒன்ராறியோ மாகாணசபை உறுப்பினராகவும் தமிழர் வெற்றிபெற முடியுமென்றால் நகரசபையில் வெற்றிபெற முடியாத காரணமென்ன?

இந்த மாதம் நடைபெறுகின்ற தேர்தலில் மூன்று தமிழர்கள் வெவ்வேறு வட்டாரங்களில் கவுன்சிலர் பதவிக்கு போட்டியிடுகின்றனர். ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபை உறுப்பினர் பதவிக்கு நான்கு தமிழர் போட்டியிடுகின்றனர். இவர்களுள் எத்தனை பேர் வெற்றிபெறக்கூடும். தமிழ்ச் சமூகம் இத்தேர்தலை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறது? இங்குள்ள மற்றைய இனக்குழுமங்களோடு சேர்ந்து வாக்குகளைப் பெறக்கூடிய வாய்ப்பை எந்தளவுக்கு ஏற்படுத்தியுள்ளது?

இவ்விடயத்தில் இங்குள்ள தமிழர் சமூக அமைப்புகள் ஒன்றுபட்டு செயற்பட்டு இயங்குதளத்தை உருவாக்கிப் பணியாற்றும் நிலை காணப்படவில்லை. குழுக்களாகப் பிரிந்து நிற்பதும், எவர் வென்றாலும் பரவாயில்லை என்ற மனோநிலையில் காணப்படுவதும், சிலரை தோற்கடிக்க வேண்டுமென்று குறி வைத்து இயங்குவதும் பாதகமான நிலைமையையே ஏற்படுத்தும்.



இனத்துவ அடிப்படையில் பார்க்கையில் இங்குள்ள 25 வட்டாரங்களில் ஆகக்குறைந்தது பத்து வட்டாரங்களிலாவது சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் வெற்றிபெற வேண்டும். ஆனால் அதற்கான அரசியல் சுவாத்தியம் காணப்படவில்லை. இதுபற்றி இனியாவது சிந்திக்க வேண்டும்.

எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

தென்கொரியா தனது நாட்டு சனத்தொகையை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு பிரசவத்துக்கும் 60,000 ரூபாவை மாதாந்தம் வழங்க முன்வந்துள்ளது. 2020ம் ஆண்டில் இங்கு 5 இலட்சம் குழந்தைகள் பிறந்தன. ஆனால் 2021ல் இரண்டு லட்சத்து அறுபத்தாறாயிரம் குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளன. அடுத்துப் பிறக்கப்போகும் முதலாவது பத்து லட்சம் பிள்ளைகளுக்கு இந்தச் சன்மானம் கிடைக்கும். பின்னர் படிப்படியாக இத்தொகை பாதியாகக் குறைந்து செல்லும்.

கென்யாவில் வாழும் 61 வயது ஆண் ஒருவர் உலகில் மிகவும் பிரசித்தி பெற்றவராகியுள்ளார். இவருக்கு பதினைந்து மனைவிமார் உண்டு. அனைவரும் ஒரே வீட்டில் ஒரு கிராமம் போன்று மகிழ்ச்சியாக வாழுகின்றனர். இவருக்கு பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளுமாக 107 வாரிசுகள் உள்ளனர். கென்ய நாட்டு பத்திரிகைகள் இக்குடும்பத்தை முன்மாதிரிக் கிராமம் என அழைத்து ஆவணப்படுத்தி வருகின்றன. சமூக ஊடகங்களும் இவர்களை விட்டு வைக்கவில்லை.

முப்பது கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து புதைபடிவமான மீனின் இதயத்தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கோகோ என்ற மீனுக்குச் சொந்தமான இந்த இதயத்தை வைத்து மனிதர்கள் உட்பட விலங்குகளிடம் காணப்படும் இதயம் எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதைக் கண்டறிவதே ஆய்வாளர்களின் இலக்கு. பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் அழிந்து போன இந்த மீனினத்தின் கண்டுபிடிப்பு ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

1350 கிலோ உருளைக்கிழங்கில் ஒரு ரொட்டியை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளனர் சுவிஸ் நாட்டின் விவசாயிகள் சங்கத்தினர். றொஸ்டி என அழைக்கப்படும் சுவிற்சர்லாந்தின் தேசிய உணவான இந்த ரொட்டி சிலுவை வடிவத்தில் 13 சதுர மீற்றர் நீளத்தில் சமைக்கப்பட்டது. இங்கு வாழும் லாபி குழுவினரின் 125வது ஆண்டை முன்னிட்டு பேர்ண் நாடாளுமன்றத்தின் முன்னால் பகிரங்க வெளியில் உருவாக்கப்பட்ட இந்த ரொட்டி வழிப்போக்கர்களுக்கு இனாமாக விநியோகிக்கப்பட்டது.

ஜேர்மனியின் மிகப்பெரிய நாட்டுப்புற விழாவான ஒக்டோபர்ஃபெஸ் என அழைக்கப்படும் பியர் அருந்தும் திருவிழா இப்பொழுது ஆரம்பமாகியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறாத இவ்விழா இம்முறை பவேரியா மாகாணத்திலுள்ள முனிச் நகரத்தில் நடைபெறுகிறது. 34.5 ஹெக்டர் பரப்பளவைக் கொண்ட இடத்தில் இடம்பெறும் இவ்விழாவுக்கு உலகம் முழுவதிலுமிருந்து இலட்சக் கணக்கானவர்கள் கலந்து கொள்கின்றனர். பங்கேங்கும் பெண்கள் பாரம்பரியமான டிம்டி ஆடையை அணிகிறார்கள்.

உலகில் மிக உயரமான தொடர்மாடிக் கட்டிடம் அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் உருவாகி வருகிறது. எம்பயர் ஸ்ரேட் கட்டிடத்தைவிட இது உயரமானது. மொத்தம் 131 மாடிகளைக் கொண்டது. 129வது மாடியிலிருந்து 131 வரையான மாடிகள் படிக்கட்டுகளால் இணைக்கப்பட்டு, மூன்று பென்ற்ஹவுஸ் வடிவில் அமைந்துள்ளன. ஏழு படுக்கை அறைகள், எட்டுக் குளியலறைகள் இதன் விசேசம். கிறிஸ்டல் நகைப்பெட்டி என அழைக்கப்படும் இக்கட்டிடத்தின் பெறுமதி 250 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமானது.

## கவிஞர் புகாரியின் இரண்டு கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

கனடிய சமூகத்தில் நன்கறியப்பட்டவரான கவிஞர் புகாரியின், ‘அன்புள்ள நயாகரா’, ‘நயாகரா சொல்லும் சாரல் வாழ்த்து’ எனும் இரண்டு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ம் திகதி மதியம் 2 மணிமுதல் ஸ்காபரோ சிவிக் சென்ரர் அரங்கில் நடைபெறவுள்ளது. தமிழர் தகவல் உட்பட கனடாவின் பல்வேறு பத்திரிகைகள், வானொலிகளில் பங்களித்து வரும் புகாரி அவர்கள் கவியரங்க மேடைகளையும் அலங்கரித்து வருபவர்.

“சூரியனின் கதிரழைப்பு காலையில் வரும், மரங்களின் அடர்நிழல் மதியத்தில் வரும், தென்றலின் சிலுசிலுப்பு மாலையில் வரும், நிலவின் கிசுகிசுப்பு இரவில் வரும், இவை யாவும் ஒன்றாக டிசம்பர் மூன்றில் வரும், சுகிக்க வாருங்கள் ஸ்காபரோ சிவிக் சென்ரருக்கு!” என்று அன்பர்கள் நண்பர்கள் அனைவரையும் கவிநயம் கொண்டு அழைக்கிறார் கவிஞர் புகாரி. இவருடன் தொடர்பு கொள்ள 416 500 0972 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

## பியர் பொலிவெய்ர் கனடிய கன்சர்வேடிவின் புதிய தலைவர்

ஒன்ராறியோ மாகாணத்தின் ஒட்டாவா பிரதேச காள்ரன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான பியர் பொலிவெய்ர் (43 வயது) கனடிய கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கான உட்கட்சித் தேர்தலில் மொத்தம் ஐவர் போட்டியிட்டனர். இதில் இவர் 68.15 வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இரண்டாவது இடத்துக்கு வந்த ஜோன் ஷாரே 16.0 வாக்குகளை மட்டுமே பெற்றார். மற்றைய மூவரான வெஸ்லின் லூவிஸ் 9.69, நோமன் பேபர் 5.83, ஸ்கொட் அற்சிசன் 1.06 வீத வாக்குகளைப் பெற்றனர்.

பியர் பொலிவெய்ர் கன்சர்வேடிவ் தலைவர் பதவி வழியாக கனடிய நாடாளுமன்றத்தின் அதிகாரபூர்வ எதிர்கட்சித் தலைவராகியுள்ளார். 2004ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஏழு பொதுத்தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளதோடு, முன்னைய கன்சர்வேடிவ் ஆட்சிகளின்போது பல்வேறு அமைச்சர் பதவிகளையும் வகித்தவர். 24 வயதிலிருந்து அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர், ஆரம்பத்தில் கனடியன் அலையன்ஸ் கட்சித் தலைவரான ஸ்ரொக்வெல் டே அவர்களின் ஆலோசகராக பணியாற்றிவிட்டு 25 வயதில் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர்.



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

# சனநாயக நெறிகளை மதித்த ஒரு மாமனிதனின் மறைவு

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் நாயகமாகவும் 1980களில் சோவியத் ஒன்றியத்தின் இறுதித் தலைவரா - கவும் பதவி வகித்த மிக்கேல் செர்ஜியேவிச் கொர்பச்சேவ் ஆவணி 30, 2022 இல் உயிர்நீத்தார். ஆடம்பரமும் ஆரவாரமும் இன்றி அவரது இறுதிச் சடங்குகள் செப்டெம்பர் 03இல் நிகழ்ந்தபின் அவரது மனைவியின் கல்லறையின் அருகிலேயே அவரும் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

உலக வல்லரசுகளுக்கிடையில் 1980களின் இறுதிக் காலத்தில் உக்கிரமடையத் துவங்கிய பனிப்போரையும் அணுஆயுதக் குவிப்பையும் ஓரளவேனும் குறைப்பதற்கு முயற்சி செய்த இந்தப் பெருமனிதன் 1987-88 இல் பல சவால்கள் மத்தியில் சோவியத் ஒன்றியம் சனநாயக வழிக்கு வருவதற்கான அரசியல் அமைப்பின் பாதைகளைச் செப்பனிட்டவர். அவரது முயற்சிகள் கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்கும் 1991 இல் சோவியத் யூனியனின் உடைவுக்கும் வழிவகுத்ததென்பதும் பரவலான ஒரு கருத்து.



இவரது தாரக மந்திரப் பதங்களான ‘கிளாஸ்னோஸ்ட்’ (திறந்ததன்மை), ‘பெரெஸ்ட்ரோயிகா’ (மறுசீரமைப்பு) என்ற இரண்டு ரஸ்யப்பதங்கள் கொர்பச்சேவ் சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பின் ஆழமான சீர்திருத்தக் கொள்கைகளின் எண்ணக் கருக்களாக சில காலம் உலா வந்தவை.

## ஊரும் உலகும் - 10

கருத்துச் சுதந்திரம், தாராள தகவல் பரிமாற்றம், பத்திரிகை மற்றும் ஒளிபரப்பு ஊடகங்கள், அரசியல் கொள்கை விமர்சனங்கள் போன்றவற்றில் முன்னொருபோதும் இல்லாத மாற்றங்களை வலிந்து புகுத்தியவர். சர்வாதிகார ஆட்சி மரபுகளை முற்றிலும் நிராகரித்து சுதந்திர வழிமுறைகளை நோக்கி ஆட்சியை நகர்த்த முயன்றவர். இந்த எண்ணக்கருக்கள் மூலமாக சோவியத் பொருளாதாரத்தில் வரையறுக்கப்பட்ட, தடையற்ற சந்தைப்படுத்தல் முறைமைகளை இவர் அறிமுகப்படுத்தியபோது பழமைவாதிகளின் கடுமையான எதிர்ப்பை துணிவோடு எதிர்கொண்டவர்.

சோவியத் ஒன்றியத்தின் தலைவராகப் பதவியேற்ற ஆரம்ப நாட்களிலேயே வளர்ச்சியுற்ற ஐரோப்பியா, அமெரிக்க நாடுகளுடன் நட்பான உறவுகளையும் வர்த்தகத்தையும் வளர்க்க முனைந்தவர். அப்போதைய அமெரிக்க அதிபர் றொனால்ட் றேகன் அவர்களுடன் இணைந்து தமது இரு நாடுகளினதும் கையிருப்பில் உள்ள இடைநிலை அணுகுண்டுமுனை ஏவுகணைகளை அழிப்பபதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்.

1989-90ன் பிற்பகுதியில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்ட் அல்லாத அரசுகள் தேர்தல் மூலமாக ஆட்சியில் அமர வழி சமைத்தவர் இந்த மாமனிதன் கொர்பச்சேவ். அந்த நாடுகளிலிருந்து சோவியத் துருப்புகளை படிப்படியாக திரும்பப்பெற ஒப்புக்கொண்டாதோடு 1990ல் மேற்கு ஜெர்மனியுடன் கிழக்கை மீண்டும் இணைக்கவும் ஒப்புதல் தந்தவர்.

ஜெர்மனி, மீள்இணைக்கப்பட்டதும், அந்நாடு சோவியத் ஒன்றியத்தின் நீண்டகால எதிரியான வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் உறுப்பினராவதற்கும் அவர் ஒப்புதல் வழங்கினார். சர்வதேச உறவுகளில் அவரது அற்புதமான சாதனைகளைப் பாராட்டி 1990ம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் இறந்ததை தலைப்புச் செய்தியாகத் தாங்கி வந்த பிரபலமான சர்வதேச பத்திரிகைகள் பல “சமாதானத்தை தேடிய மனிதன் மறைந்தான்” என்ற தொனியிலேயே ஆசிரிய தலையங்கங்கள் எழுதியிருந்தன.

கொர்பச்சேவ் அவர்கள் ஸ்டாவ்ரோபோல் அருகே எளிமையான விவசாயக் குடும்பத்தில் மார்ச் 2, 1931ல் பிறந்தார். சிறுவயதிலிருந்தே தனது படிப்புடன் விவசாய வேலைகளிலும் தந்தையுடன் இணைந்து ஈடுபட்டார். 1952ல் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகி 1955ல் மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் சட்டவியல் துறையில் பட்டப்படிப்பை முடித்தார். அங்கேதான் அவரது சகமாணவி ரைசா டைடரென் - கோவைச் சந்தித்து திருமணம் செய்து கொண்டார்.

ஜனநாயக முறையில் ரஸ்யாவின் முதல் ஜனாதிபதியாகப் பதவியில் அமர்ந்த போரிஸ் யெல்ட்சின் 2007ல் இறந்தபோது அவரது இறுதிச் சடங்குகள் மிகவும் பெரிய அளவில் ஒழுங்கு செய்யப்பட்டன. யெல்ட்சினின் இறுதிச் சடங்கில் முன்னாள் அமெரிக்க அதிபர்கள் பில் கிளிண்டன் மற்றும் ஜார்ஜ் புஷ், முன்னாள் பிரித்தானிய பிரதமர் ஜோன் மேஜர், இளவரசர் ஆண்ட்ரூ உட்பட பல உலகத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஆனால் “மனித உயிர்களை விட விலைமதிப்பற்ற எதுவும் உலகில் இல்லை” என்று முழங்கிய கொர்பச்சேவ் இறந்தபோது அவரது இறுதிச் சடங்கில் உலகப் பெருநாடுகளின் தலைவர்கள் யாரும் இல்லை. மேற்குலகத் தடைகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ரஸ்ய அரசு நூற்றுக்கணக்கான வெளிநாட்டுத் தலைவர்களை ரஸ்யாவுக்குள் நுழைவதற்குத் தடை செய்ததும் இதற்கு ஒரு காரணம்.

அமெரிக்க - ரஸ்ய பனிப்போர் உக்கிரமடைந்த 1980களில் அமெரிக்க வெளியுறவு செயலாளராக பணியாற்றிய இன்று 99 வயதான ஹென்றி கிஸ்ஸிங்கர் அவர்கள், கொர்பச்சேவ் அவர்களுடன் பல தடவை பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர். பிபிசியில் அவர் கூறிய இரங்கல் செய்தியில் சில வார்த்தைகளை இங்கு நினைவு கூரல் தகும். “ஐரோப்பிய மக்களும், ரஸ்யர்களும் சோவியத் தலைவர் மிகைல் கொர்பச்சேவ் அவர்களுக்கு மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளனர்.

( 31 பக்கம் வருக )

எல்லை கடந்த உலா

பிரேம் சிவகுரு - இங்கிலாந்து



# முடியாட்சியையும் மன்னரையும் புதிய கீதம் காப்பாற்றுமா?

சூரியனே மறையாத சாம்ராஜ்யம் என ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட பிரித்தானிய சாம்ராஜ்யம், ஆட்டம் கண்டு அதன் கீர்த்திச்சூரியன் உலகில் மறைய ஆரம்பித்த வேளையில் இலங்கையில் ஈழ தமிழினத்தின் மீது பேரினவாத கிரகணம் படிய ஆரம்பித்தது.

பிரித்தானியாவின் கீர்த்திச்சூரியன் உலகில் மறைய ஆரம்பித்த வேளையில் சுதந்திர இலங்கையில் ஆட்சிக்கு வந்த பேரினவாதம் தமிழர்களுக்கு கிரகணத்தை வழங்கியபோதுதான் ராணியும் ஆட்சிக்கு வந்திருந்தார்.

இந்த வரலாற்றுத்தடத்தில் பிரித்தானிய ராணியின் மரணம் ஒருபக்கம் உலகில் அதிக புகழாரங்களை வழங்கிக்கொண்டாலும், மறுபுறத்தே இந்த மரணம் ஏதோ ஒருவகையில் பிரித்தானியாவின் குடியேற்றகால இருள் பற்றிய உரையாடலை புதுப்பித்திருப்பதையும் மறுக்கமுடியாது.

உலகளாவிய ரீதியில் அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்கள் உருவாகிய நேரத்தில் பிரித்தானியர்களின் ராணிமறைந்துவிட்டார். மறைந்தவர் சாமானிய பெண் இல்லையென்பதால் அவருக்கு Lying in state என்ற மதிப்புக்குரிய துயில் நிலை அஞ்சலிப்பு வழங்கப்பட்டிருந்ததை 10 நாட்களுக்கு உலக ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

ராணியின் உடலம் இப்போது வின்சோர் கோட்டை வளாகத்தில் உள்ள புனித ஜோர்ஸ் தேவாலய முடியாட்சி கல்லறை தோட்டத்தில் காற்றுப் புகமுடியாத ஈயஉலோக கவசம் இடப்பட்ட கருங்காலி (ஓக்) பேழைக்குள் தூங்கியபடி இருக்கிறது.

கடந்த 30 வருடங்களுக்கு முன்னரே செய்யப்பட்டு இதுவரைஅவருக்காக காத்திருந்த பேழைக்கு கடந்த மாதத்தில் வேளைவந்தது. இந்த பேழையில் ஈயகவசம் இருப்பதால் அதற்குள் இருக்கும் உடலம் லேசில் பழுதடையாது எனவும் கூறப்படுகிறது. முன்னர் இளவரசி டயானாவும் இவ்வாறுதான் கால் தொன் ஈயகவசத்துடன் புதைக்கப்பட்டிருந்தார். ஆனால் ஒருவேளை ஈயம் இருப்பதால் பிரித்தானியர்கள் வர்ணிப்பதுபோல ராணியின் புகழுடம்பு பழுதடையாமல் இருந்தாலும் அவர் கடந்த 70 வருடங்களாக கட்டிக்காத்த உள்ளூர் மற்றும் கடல்கடந்த றோயல் பெருமையை இனி புதியமன்னர் மூன்றாம் சார்ள்ஸ் காத்துக்கொள்வாரா என்பது ஒரு வினா.

ராணியின் கல்லறைக் குழிமீது மீது எலிசபெத் II 1926-2022 என எழுத்துகள் பொறிக்கப்பட்ட மாபிள் கல் ஒன்று தற்போது மூடப்பட்டுள்ளது. அதனுடன் சேர்த்து 70 வருடங்களாக பிரித்தானியாவில் முடியாட்சிசெய்த ஒரு வரலாறும் ஓய்வில் மூடப்பட்டிருந்தாலும் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல பிரித்தானியாவின் குடியேற்றகால பேசுபொருள் திறந்துதான் உள்ளது.

வின்சோர் கோட்டை வளாகத்தில் கடந்த 18 ஆந்திகதி ராணியின் முடியாட்சியின் முடிவைக்குறிக்கும் மரபு நிகழ்வுகள் இடம்பெற்றபோது ராணியின் இம்பீரியல் ஸ்ரேற் கிறவுண் எனப்படும் கிரீடம் மற்றும் அவரது இறையாண்மைக்கோளம் மற்றும் முடியாட்சிகோல் ஆகியன பேழையில் இருந்து இறுதியாக அகற்றப்பட்டவேளை இன்னொரு நிகழ்வும் நடந்தகை பலர் அவதானித்திருக்காமல் விட்டிருக்கக்கூடும். லோர்ட் சேம்பர்லெய்ன் தனது அதிகாரபூர்வ முடியாட்சி பணிக்குரிய கோலை உடைத்து ராணியின் பேழையில்வைத்த நிகழ்வு அது. முடியாட்சிக்கு பணியாளர்கள் செய்த சேவையின் முடிவைக் குறிக்கும் ஒரு பாரம்பரிய நிகழ்வு இது.

இந்த நிகழ்வு இனி பொதுநலவாய நாடுகளின் குடும்பத்திலும் நடக்குமா? ராணியின் மறைவுக்குப்பின்னர் அவர்களும் இனி முடியாட்சிக்கு செய்த சேவையின் முடிவைக்குறிக்கும் வகையில் மன்னர் சார்ள்சுக்கு ஒரு செய்தியை அனுப்புவார்களா? இதுதான் இப்போது ஒரு வினா. ஆனால் இந்த வினாவுக்குரிய பதிலில் பக்கிங்காம் அரண்மனைக்கு பெரும் சாதகங்கள் இல்லை. ஏனென்றால் ராணியின் மறைவைத்தொடர்ந்து இதுவரை பொதுநலவாய குடும்பத்தில் இருந்த ஆன்ரிகுவா மற்றும் பார்புடாவை குடியரசாக மாறுவது குறித்து குடியொப்ப வாக்கெடுப்பு (சர்வஜன வாக்கெடுப்பு) நடத்தப்படும் என்று அதன் பிரதமர் ஏற்கனவே தெரிவித்துவிட்டார்.

இந்த நகர்வு பக்கிங்காம் அரண்மனையுடன் அல்லது லண்டனுடன் பகைமையை உருவாக்கும் செயல் அல்ல என்று அவர் கூறுவது உள்ளூருக்குரிய செய்தி அல்ல. ஏனென்றால் ராணியின் மறைவையடுத்து மூன்றாம் சார்ல்ஸ் மன்னர் இந்தக் கரீபியன் நாட்டின் அரச தலைவராகவும் உள்ளார் என்ற விடயம் உறுதிப்படுத்தபட்ட பின்னர் இந்தக்கருத்து வந்தது.

குட்டிநாடான ஆன்ரிகுவாவின்நிலை இதுவானால் கனடா ஆஸ்திரேலியா போன்ற பெரிய நாடுகளின் நிலை என்ன?

இந்த மூன்று நாடுகள் மட்டுமல்ல பஹாமாஸ், பெலிஸ், கிரெனடா, ஜமைக்கா, நியூசிலாந்து, சென்ற்.வின்சென்ட் மற்றும் கிரனாடைன்ஸ், சொலமன் தீவுகள் மற்றும் துவாலு, பப்புவா நியூகினி, சென்ற் கிட்ஸ் மற்றும் நெவிஸ், செனற் லூசியா, ஆகிய 14 நாடுகளுக்கும் இப்போது மூன்றாம் சார்ள்ஸ் தான் அரசின்தலைவர். (அரசாங்கத்துக்கு அல்ல).

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவில் 2026 வரையான நான்கு ஆண்டுகளுக்கு இதேபோன்ற வாக்கெடுப்புக்கு சாத்தியம் இல்லையென அரசதரப்பு தெரிவித்தாலும் இப்போதைய பிரதமர் அன்ரனி அல்பானீசி குடியரசுக்கு ஆதரவானவர் என்பதால் ஆஸ்திரேலியாவிலும் முடியாட்சி குறித்த விவாதத்தை மீண்டும் தூண்டக்கூடும்

ராணிக்குப் பின்னர் பல நாடுகள் முடியாட்சியின் இருப்பை மறுபரிசீலனை செய்வதும் குடியரசுதான் உண்மையான இறையாண்மை கொண்ட சுதந்திரம் என்ற கருத்து வலுப்பதும் மன்னர் சார்ள்சுக்கு உவப்பானதாக தெரியவில்லை.

ராணி எலிசபெத்துக்கு பிரியாவிடை வழங்கியபோது குயின்ஸ் பைப்பர் எனப்படும் அவரது குழாய் வாத்தியக்காரர் Sleep, dearie, sleep என உருக்கமாக பாரம்பரிய பாடலை இறுதி துயில் கொள்ள ஊதிய பின்னர் பிரித்தானியாவின் புதிய தேசிய கீதமான God Save the King பாடப்பட்டது.

புதிய அரண்மனை வலுவிடயத்தில் தூங்கும் ராணிக்கு இனி வேலையில்லை. ஆனால் புதிய தேசிய கீதத்தில் வருவது போல கடவுள் மன்னரை காப்பாற்றுவாரோ இல்லையோ - மன்னர் தன்னையும் காக்கத்தான் வேண்டும்.

**Indran B. Indrakrishnan** MD FRCP (London); FRCP (C); FACP; FACG



# Sudden Cardiac Death in Young

It is quite common to hear news regarding the sudden death of young individuals after a tiring gym session or workout who were previously presumed to be completely healthy.Sudden cardiac-related deaths often seen to occur in the elderly but the number of sudden cardiac-related death in youngsters has increased tremendously over the past few years. Though it is common in athletes and in people indulging in routine strenuous physical activity, it can occur in other young individuals too. There are no well-established surveillance or reporting systems in most countries, including North America. According to the Centers for Disease Control and Prevention (CDC), around 2000 young adults under the age of 25 who otherwise seem healthy die each year of sudden cardiac death in the US. This number creates a great impact on the families and communities affected. Therefore, it is important to understand the cause and steps of prevention that can be taken. Sudden cardiac death is defined as the abrupt loss of cardiac function resulting in a cardiovascular collapse either due to a life-threatening arrhythmia (dysfunction of the heart's electrical activity) or a loss of the heart's pumping function usually within a period of 1hr of onset of symptoms.

It is quite rare in young adults (<35yrs).

**Common causes leading to sudden cardiac death in young**

- Coronary artery anomalies - Inherited abnormalities in the structure of the coronary arteries which supply blood to the heart are compromised in times of increased physical activity.
- Hypertrophic Cardiomyopathy - Abnormal thickening of the heart walls which prevents the heart from pumping blood efficiently.
- Arrhythmogenic right ventricular cardiomyopathy - A condition that weakens the muscular wall of the heart. It shows no symptoms in the early stages, thereby increasing the risk of sudden death, especially during strenuous exercises.
- Arrhythmias- Undetected arrhythmias due to an undiagnosed underlying genetic disease causes electrical dysfunction in heart. This leads to an unorganized or chaotic heart rhythm.
- Myocarditis – Inflammation of the heart wall causing cardiac dysfunction. Both Covid infections & Covid vaccines are well known causes of myocarditis, particularly in the young.

Besides the above, there are other rare causes including genetic abnormalities like primary ion channelopathies and cardiac muscle disorders.

According to data available, only half of the men and one-third of the women have a diagnosed cardiac disorder or warning signs or symptoms before the sudden cardiac episode.

## Preventive measures

1) Family History of cardiac disease - It is important to be informed and collect the family history of the various cardiac disorders in the immediate family members (Parents, siblings, uncles, aunts, nieces, nephews, etc) and mention the same to your doctor. This allows exploring screening options and early detection of heart diseases or risk factors if any.
2) Life support training and installation of Automatic Electric Defibrillator AEDs - It is necessary to train the public in delivering basic life support, which includes performing cardiopulmonary resuscitation (CPR) and early defibrillation using portable automatic defibrillators. Installation of adequate AEDs in public places like train stations, airports, gyms, etc. stands a prerequisite.

- Knowledge about warning signs - Warning signs like sudden chest pain, fainting episode during exercise which could be early signs of a underlying heart disease.

As for everyone, healthy lifestyle modifications are important for the young ones too which include avoidance of smoking, maintaining healthy body weight, avoiding a sedentary lifestyle, regular moderate exercise, managing stress, and consuming a healthy diet. These changes create a substantial reduction in the incidence of sudden cardiac deaths.

Currently, there are no guidelines are in place for performing routine screening tests like Electrocardiograms (EKG) in individuals with no risk factors as it is deemed not cost effective and could lead to over-diagnosis. Healthy lifestyle modifications, genetic screening, and imparting information regarding the warning signs of sudden cardiac death remain the mainstay in reducing sudden cardiac deaths in young individuals.

**Dr. Indran B. Indrakrishnan**
Adjunct Professor of Medicine - Emory University School of Medicine
GDC Endoscopy Center LLC and Gwinnett Digestive Clinic PC
475 Philip Blvd, Suite # 304, Lawrenceville, GA 30046
www.GDCEndoscopy.com



வேதநாயகன் தபேந்திரன்

# கடந்து போகாத கடவுச்சீட்டு

“உங்கட மகனை நான் அனுப்புகிறேன். அவரின்ரை புத்தகத்தையும், 50,000 ரூபா காசை அட்வான்சாகவும் தாங்கோ -
“ஓம் தம்பி சொன்ன மாதிரி செய்யிறன்”

எம்மவரின் புலம்பெயர்வு காலத்தில் சாதாரணமாகப் பேசப்பட்ட வசனங்களில் ஒன்று. ஏஜென்ஸிமாருக்கும் எமக்குமான உரையாடல்களில் இச் சொற்கள் சர்வசா - தாரணமாகவே வரும். அது என்ன புத்தகம்? எம்மவருக்கும் புத்தகம் எனப்படும் பாஸ்போட்டுக்கும் இரத்தமும் சதையுமான உறவு ஒன்று உள்ளது.

பலாலி விமான நிலையம் ஊடாக நாம் வெகு சுதந்திரமாக இந்தியாவுக்குப் போய் வந்த ஒரு காலம் இருந்தது. 1974 ஆம் ஆண்டு எனது அப்பாவை பலாலி விமான நிலையம் வரை சென்று இந்தியா பயணமாக வழியனுப்பி வந்தது ஞாபகத்திற்கு வருகிறது. அப்போது பாஸ்போட் இல்லாமல் அவசரகாலப் பத்திரம் (Emergency Certificate) என்ற ஒரு முறை பயன்படுத்தும் ஆவணம் மூலமாக பயணத்தை மேற்கொண்டோரும் உள்ளனர். நாளாந்தம் காலை 10 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழகத்தின் திருச்சி விமான நிலையத்திற்கு விமானமொன்று புறப்படும். அதில் யாழ்ப்பாணத்தில் வெட்டப்பட்ட கிடாய் ஆட்டின் இறைச்சியை விமான நிலைய ஊழியர்கள் மூலமாகத் தமது உறவுகளுக்கு கிரமமாகக் கொடுத்து விட்டோரும் உள்ளனர்.

கொடிகாமத்திற்கு அங்காலை கறுப்பா சிவப்பா எனத் தெரியாமல் தமது ஊருக்குள் முடங்கி வாழ்ந்த காலமொன்றும் இருந்தது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கையர்கள் தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்று கைநிறைய உழைக்கும் நிலை வந்தது. அப்போது பாஸ்போட் எடுப்பதற்கான ஆள்களின் தொகை சடுதியாகப் பல மடங்கு அதிகரித்தது. அதனால் அரசாங்கம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு என மட்டும் குறித்துப் பாஸ்போட்டை வழங்கும் முறையைக் கொண்டு வந்தது. மத்திய கிழக்கு எனப்பட்ட மேற்காசிய அரபு நாடுகளில் உழைத்த பணம் நாட்டின் நாலா பகுதிகளிலும் புதுப் பணக்காரக் குடும்பங்களை உருவாக்கியது.

காலச் சக்கரம் உருண்டது. போர் மேகங்கள் கருக்கொள்ள தப்பிக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு எம்மவர் போகத் தொடங்கும் நிலைமை 1980களின் ஆரம்பத்தில் வந்தது. அப்போது பாஸ்போட்டின் தேவை எழுந்தது. கச்சேரி எனப்பட்ட மாவட்டச் செயலகங்கள் ஊடாக மட்டும் பாஸ்போட்டிற்கு விண்ணப்பிக்கும் முறை இருந்தது. அப்படி விண்ணப்பித்தால் 3 மாத கால அளவில் பாஸ்போட் வந்தது. நேரடியாகக் கொழும்பு சென்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினுள் உள்ளால் அலுவல் பார்த்து ஓரிரு நாள்களில் பாஸ்போட் எடுக்கும் வழக்கமும் இருந்தது.

நாட்டின் நிதிப் பற்றாக்குறைக்கு நிதி பெறும் வழிகளில் ஒன்றாக ஒரே நாளில் பாஸ்போட் பெறும் முறை ஒன்று 1980களின் ஆரம்பமானது. பாஸ்போட் அலுவலகத்தில் இலஞ்சம் கொடுத்து பாஸ்போட்டை ஓரிரு நாள்களில் பெறுகின்றனர் - அதை ஏன் அரசாங்கத்திற்கு வருமானமாக மாற்றக் கூடாதென நினைத்து இந்த நடைமுறை வந்தது. சகல நாடுகளுக்கும் செல்வதற்கான பொன்ட் சைன் எனப்பட்ட பிணை நிற்கும் நடைமுறை ஒன்றை அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி இருந்தது. இதன்படி குறிப்பிட்ட மட்டத்திற்கு மேலாக மாதச் சம்பளம் பெறும் ஒருவர் உரிய படிவத்தை நிரப்பி சகல நாடுகளுக்கும் செல்வதற்கான பாஸ்போட் தேவைப்படுபவருக்கான பிணை எனப்பட்ட பொன்ட் சைன் (Bond Sign) வைத்தல் வேண்டும். அந்தப் பாஸ்போட்டில் பொன்ட் வைத்தவருக்கு என மாவட்டக் குறியீட்டுடன் ஓர் இலக்கம் ஒதுக்கப்படும்.




வெளிநாட்டுக்குச் செல்பவர் திரும்பி வராவிட்டால் பொன்ட் சைன் வைத்தவர்தான் அதற்குரிய பிணைப் பணத்தைக் கட்ட வேண்டும். இதனால் பொன்ட் சைன் வைப்பவர்கள் தமக்கென ஒரு தொகைப் பணத்தை வாங்கிக் கொண்டு பிணை வைத்தார்கள். நிதி அமைச்சரான ரொனி டிமெல் பின்னாளில் சகல நாடுகளுக் - குமான கடவுச் சீட்டைப் பெறுவதற்கான பொன்ட் சைன் முறையை நீக்கி, மத்திய கிழக்கு நாடுகளுக்கான பாஸ்போட்டுக்கு ஒரு கட்டணமும், சகல நாடுகளுக்குமான பாஸ்போட்டுக்கு ஒரு கட்டணமும் அறவிடும் நடைமுறையைக் கொண்டு வந்தார்.

வல்லரசுப் பனிப் போர்க் காலம் இருந்தபோது கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி முரண்பாடுகள் தீவிரமாக இருந்தது. மேற்கு ஜேர்மனி கிழக்கு ஜேர்மனிய மக்களை வசியப்படுத்தி பேர்லின் எல்லைச் சுவரேறிக் குதிக்க வைத்தது. அதற்குப் பழிவாங்க கிழக்கு ஜேர்மனி இலங்கை போன்ற போர் மேகம் சூழ்ந்த நாடுகளிலிருந்து ஆள்களை தனது நாடு ஊடாக மேற்கு ஜேர்மனி போக வழிவிட்டது. எம்மவர் பல ஆயிரம் பேர் மேற்கு ஐரோப்பா போக கிழக்கு ஜேர்மனி தாராள உபயம் தந்தது. ஒருவரது பாஸ்போட்டை இன்னொருவர் உடமையாக வைத்திருப்பது சட்டப்படி குற்றம். ஆனால் ஏஜென்ஸிமார் பலரது பாஸ்போட்டை தமது உடமையாக வைத்திருப்பது சர்வ சாதாரணமாக இருந்தது. பாஸ்போட்டில் தலைமாற்றி இன்னொருவரை அனுப்புவதனை ஹெல்மட் என அழைத்தார்கள்.

புலம்பெயர்ந்த பல இலட்சம் பேர் இன்று பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சலாந்து, சுவீடன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து என தாம் வாழ்ந்த நாடுகளின் பிரசையாகி அந்த நாடுகளின் பாஸ்போட்டுடன் சிறிலங்கா விசா பெற்று வருவது சாதாரண ஒன்றாகி விட்டது. கொழும்பு, கண்டி, அநுராதபுரம் ஆகிய இடங்களில் மட்டுமிருந்த பாஸ்போட் வழங்கும் அலுவலகங்கள் 2010ஆம் ஆண்டுக்குப் பின்பாக மாகாணத்திற்கு ஒரு அலுவலகம் என அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டு விட்டது. பலாலி, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு போன்ற பிராந்திய விமான நிலையங்கள் இயங்கத் தொடங்கி விட்டன. அதிலும் பலாலி விமான நிலையம் 17.10.2019 முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் என்ற பெயரில் இயங்கத்(?) தொடங்கி விட்டது.



கனகேஸ்வரி நடராஜா

# ஆட்டு மந்தைப் புத்தி
# Herd Mentality

ஆட்டு மந்தைப் புத்தி என்ற சொற்றொடரை பலமுறை கேட்டிருப்போம். பல ஆடுகள் மந்தையாக ஓரிடத்தில் மேய்ந்து கொண்டிருக்கும். ஓர் ஆடு அங்கிருந்த கிணறு ஒன்றை எட்டிப் பார்த்துவிட்டு, என்ன நினைத்ததோ தெரியவில்லை அதற்குள் குதித்து விடும். இதனைப் பார்த்த ஏனைய ஆடுகள் எந்தவிதமான சிந்தனையுமின்றி ஒன்றின் பின் ஒன்றாக கிணற்றுக்குள் குதித்து விடுகின்றன. இதுதான் ஆட்டு மந்தைப் புத்தி என்ற சொற்றொடர் ஏற்படக் காரணம்.

ஒருவர் எதற்காகச் செய்கிறார் என்பதைப் பற்றிய எந்தச் சிந்தனையுமின்றி அவரைப் பலரும் பின்பற்றுவது சர்வசாதாரணமாகி விட்டது. கனடாவில் பொருளாதார நிலையில் எல்லோரும் சுமுகமாகக் காணப்படுகின்றனர். சமூக அந்தஸ்து, வாழ்க்கை வசதிகள் என்பவற்றில் வேறுபாடு காணப்படுவதில்லை. அதனால் ஒருவர் ஒரு விடயத்தைச் செய்துவிட்டால் அது தமக்கு தேவையா இல்லையா என்று சிந்திக்காமல் மற்றவர்களும் அதனைப் பின்பற்றுவதையும், சில சந்தர்ப்பங்களில் அதனால் பெரும் பணக்கஸ்டம், மனஉளைச்சல், உடல் வருத்தம் ஆகியவற்றுக்கு உள்ளாகி அவஸ்தைப்படுவதைக் காண்கிறோம். இன்றைய நவீன தொழில்நுட்ப வசதி காரணமாக ஒவ்வொருவரின் செயலும் உடனுக்குடன் பகிரங்கமாகி விடுகிறது. சாதனையாளர்களை பகிரங்கமாக பாராட்டத் தொடங்கி விடுவார்கள். எல்லாப் பாராட்டுகளும் மனதார இடம்பெறுவதில்லை. ஆனால் பார்ப்பவர்களை அதேபோல் செய்யும்படி தூண்டுகிறது. இதனை ஆட்டு மந்தைப் புத்தி என்று சொல்லலாம்.

சிறீயித் கிருஸ்ணன் என்பவர் ஆட்டு மந்தைப் புத்தியை விளக்கி ஓர் உண்மைச் சம்பவத்தை தமது வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார். இன்று பலவிதமான 'வட்ஸ்அப்' குழுக்கள் இயங்குகின்றன. பல சங்கங்கள், நண்பர் வட்டங்கள் பல்வேறுபட்ட அமைப்புகள் போன்றவை ஒவ்வொரு வருடமும் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளாமல் மிகவும் இலகுவாக ஒரே வேளையில் தங்கள் குழு உறுப்பினர்களோடு விரைவாக தொடர்பு கொள்கிறார்கள்.

அதனை வாசிக்கும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பகிரங்கமாக தங்கள் பதிலை தெரியப்படுத்துகிறார்கள். அதனை குழு உறுப்பினர்கள் அனைவரும் பார்க்கிறார்கள். வட்ஸ்அப் குழுவிலுள்ள ஒருவரது பிறந்த நாள் வருகிறது. ஒருவர் தனது வாழ்த்தை முதலில் பதிவு செய்கிறார். அதனைப் பார்த்து பலரும் தங்கள் வாழ்த்துகளை பதிவு செய்கின்றனர். இது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இன்னொரு உறுப்பினரின் தந்தை இறந்து போகிறார். அவருக்கு ஒருவர் இரங்கல் செய்தி அனுப்புகிறார். இன்னொரு உறுப்பினர் பெயர் குழுப்பத்தினாலோ கவனக்குறைவாலோ பிறந்தநாள் கொண்டாடுபவருக்கு இரங்கள் செய்தி அனுப்புகிறார். பலரும் இதனைப் பார்த்துவிட்டு தெளிவில்லாத நிலையில் அப்படியே செய்கின்றனர். சிலர் தந்தை இறந்தவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புகின்றனர்.


வட்ஸ்அப் குழுக்களில் இருப்பவர்கள் பலருக்கும் ஒருவரை ஒருவர் நேரடியாக அறிமுகம் இல்லை. இந்த நட்புச் சங்கிலி வெறுமையான ஒரு வெளியில் (cyber spac) நடைபெறுகிறது. இதனூடாக நடைபெறும் தவறான தகவல் பரிமாற்றங்களையும்கூட ஆட்டு மந்தைப் புத்தி என்றே சொல்லலாம். The National Geographic Channel மிகவும் நம்பகம் வாய்ந்த ஓர் அமைப்பு. இவர்கள் ஆட்டு மந்தைப் புத்தியை விளக்கி தொழில்நுட்ப உதவியுடன் பல ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளனர். அதனைப் பார்க்கும்போது எவ்வாறு கண்மூடித்தனமாக ஒருவரின் செயற்பாட்டை இன்னொருவர் பின்பற்றுகிறார் என்பது தத்ரூபமாகத் தெரிகிறது.

எமது இரண்டாம் தலைமுறையினர், மூன்றாம் தலைமுறையினர் தொழில் ரீதியாக பெரிய பதவிகளை வகிப்பதையும், பொருளாதார ரீதியாக மேம்பட்ட நிலையில் இருப்பதையும் காணலாம். இதனைப் பார்த்து பெருமிதம் அடையும் அதே நேரம் இவர்கள் தமது கலாசாரத்துக்குரிய பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிக்காமல் கண்மூடித்தனமாக மேற்கத்திய கலாசார முறைகளை பின்பற்றுவதைக் காண முடிகிறது. பல சந்தர்ப்பங்களில் வேறு கலாசார முறைகளையும் பிறந்தநாள் நிகழ்வுகள், திருமண விழாக்கள், மரணச் சடங்குகளில்கூட பின்பற்றுவதையும் காண்கிறோம்.

எமது பிள்ளைகள் சிலர் தங்கள் திருமணங்களை எங்கோ தூரத்திலுள்ள கடற்கரைகளிலும், பயணிப்பதற்குச் சிக்கலான பூங்காக்களிலும் நடத்துகிறார்கள். தாங்களே செலவு செய்கிறார்கள். நண்பர்களுக்குத்தான் இவ்வைபவங்களில் முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. பெற்றோர்கூட பிள்ளைகளின் விருந்தாளிகளாகவே செல்கிறார்கள். குடும்ப உறவினர்கள் இனத்தவர்களுக்கு அழைப்புக் கிடையாது. ஏதோ பிள்ளைகள் செய்கிறார்கள், அவர்கள் விருப்பப்படி செய்து சந்தோசமாக இருக்கட்டுமென பெற்றோர் ஆறுதல் அடைகின்றனர். இத்தகைய Destination weddings என்று மூன்றாம் தலைமுறையினர் மத்தியில் ஒரு சாதாரண விடயமாக மாறி வருகிறது. இங்கு மதச்சடங்குகளுக்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. இந்த நடைமுறையில் ஒருவரைப் பார்த்து இன்னொருவர் செய்து அதுவே வழமையாக மாறி வருகிறது.

மரணச் சடங்குகளில்கூட பல மாற்றங்கள் ஏற்படுகிறது. குடும்பத்தவர்கள் மாத்திரம் அல்லது பிரத்தியேகமானவர்கள் மாத்திரமே பங்கு பற்றலாமென முன்னறிவித்தல் கொடுக்கப்படுகிறது. பெற்றோர்களின் நண்பர்களையும் உறவினர்களையும் இன்றைய பிள்ளைகளுக்குத் தெரியாது. இதனால் இந்த மாற்றங்கள் சங்கடங்களை ஏற்படுத்துகிறது. இறந்தவரோடு அன்பாக பழகியவர்கள்கூட தமது இறுதி அஞ்சலியைச் செலுத்த விருப்பம் இருந்தும் முடியாது போகிறது. குடும்ப உறுப்பினர்களோடு மாத்திரம் மரணச் சடங்குகள் நடந்து முடிவது இன்று சகஜமாகி விட்டது.

இந்த நாடு நுகர்வோர் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு. பலவிதமான யுக்திகளை பயன்படுத்தி சந்தைப்படுத்தல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் மனதில் இடம் கொடுத்தால் பொருளாதார முடை, கலாசார சீரழிவு, உறவுகள் பகை என்பன ஏற்படும். ஆட்டு மந்தைப் புத்தி ஒரு தொற்றுநோயாக மாறி வருவதாக சிறீயித் கிருஸ்ணன் கூறுகிறார். அவதானியுங்கள் ஆனால் பின்பற்றாதீர்கள் (Respond - not React) என்பது இவரது வேண்டுகோள். தீர்மானிக்க வேண்டியது அவரவரே.



இரா. சம்பந்தன்

# கம்பர் சித்திரம் - 10

## கம்பன் காட்டிய வாலியும் தாரையும்

அந்தப் பெண்ணுக்குச் சில நாட்களாகவே உறக்கம் இல்லை. தன் கணவனான வாலியை கொல்வதற்கு அவன் தம்பி சுக்கிரீவன் இராமனை அழைத்து வந்திருக்கின்றான் என்று உளவாளிகள் வந்து எச்சரித்த பின்பு அவள் தினமும் பயந்து கொண்டே இருந்தாள்.

அன்று காலை வெளியே சுக்கீரிவனின் குரல் கேட்டுப் படுக்கையை விட்டு எழுந்த வாலியை அவள் தடுத்தாள். வெளியே போக வேண்டாம். உங்கள் தம்பி கத்துமட்டும் கத்திவிட்டுப் போகட்டும். அவன் இராமன் என்பவனை உதவிக்கு வைத்துக்கொண்டு உங்களை அழிக்க வந்திருக்கின்றான். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கோ என்றாள் அவள்.

வாலி கேட்கவில்லை. வெளியே போய் இராமனின் அம்புக்கு இலக்காகி இறந்துவிட்டான். செய்தி அந்தப் பெண்ணுக்கு அறிவிக்கப்படுகின்றது. இரத்த வெள்ளத்தில் கிடந்த கணவனின் மார்பிலே விழுந்து அழுது புலம்பினாள். அவள் வாலிக்கு மனைவி. என்னோடு அப்படி வாழ்ந்தாய் இப்படி இருந்தாய் என்று அவள் அழுதிருக்கலாம். அவள் அப்படியெல்லாம் அழவில்லை. சுற்றிவர எதிரிகள். காட்டிக் கொடுத்த தம்பி. அவள் வாலியைப் பார்த்துக் கேட்டாள். பெண்ணை ஒரு பாகமாக உடைய சிவபெருமானை மூன்று வேளையும் புது மலர் கொண்டு வழிபடும் நீ இன்றைக்கு இவ்வளவு நேரமாகியும் ஏன் அதைச் செய்யாமல் இருக்கின்றாய் என்று கேட்டாள்.

அணங்கு ஆர் பாகனை ஆசை தோறும் உற்று
உணங்கா ஒண் மலர் கொண்டு உள் அன்பொடும்
இணங்கா காலம் இரண்டொடு ஒன்றினும்
வணங்காது இத்துணை வைக வல்லையோ?

**(கம்பராமாயணம் - வாலி வதைப் படலம்)**

அவளுக்கு இன்னொரு சந்தேகம் வருகின்றது. அவள் மனம் அகலிகை கதைக்குத் தாவுகின்றது. தேவ உலக அரசனான இந்திரனுக்கு கௌதமன் என்ற முனிவனின் மனைவி அகலிகை மீது காதல் ஏற்படுகின்றது. அவள் அழகினால் கவரப்பட்டு அலைந்த இந்திரன் ஒருநாள் முனிவன் ஆற்றங்கரைக்கு நீராடச் சென்ற சமயம் பார்த்து அந்த முனிவனின் வடிவத்தையே தானும் எடுத்துக் கொண்டு ஆச்சிரமத்துள் புகுந்து அகலிகையோடு கூடி இருந்தான்.

ஒரு நிலையில் இது என் கணவன் அல்ல. இப்போது நடப்பவை எல்லாம் என் கணவன் செய்கைகள் போன்று இல்லை. என் கணவன் வடிவத்தில் வந்த இந்திரனுடன் தான் இப்போது இருக்கின்றேன் என்று தெரிந்து கொண்டும் இந்திரனை அவள் வெறுக்கவில்லை. அப்போது அங்கே வந்த முனிவன் தன் மனைவி அகலிகையை கல்லாகப் போகும்படி சாபமிட்டான்.

புக்கு அவேளாடும் காமப்
புது மண மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும்
உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கது அன்று என்ன ஓராள்
தாழ்ந்தனள் இருப்பத் தாழா
முக்கணன் அனைய ஆற்றல்
முனிவனும் முடுகி வந்தான்.

**(கம்பராமாயணம் - அகலிகைப் படலம்)**

வாலியின் மனைவிக்கு அந்த ஞாபகம் வருகின்றது. ஒரு அம்பு வந்து துளைக்கும் அளவுக்கு வாலியின் உடல் பலமற்றதாக இருக்குமா. இந்தத் தேவர்கள் தான் தாங்கள் விரும்பியதை அடைய விரும்பிய உருவம் எடுப்பார்களே. அது போல இங்கே இரத்த வெள்ளத்தில் கிடப்பது எனது கணவன் அல்லாமல் வேறொரு வாலி - யாக இருக்குமோ. நான் என் கணவன் என்று நினைத்து இன்னொருவனைத் தொட்டு இன்னொரு அகலிகை ஆகின்றேனா என்று நினைக்கின்றாள்.

நீறு ஆம் மேருவும் நீ நெருக்கினால்
மாறு ஓர் வாளி உன் மார்பை ஈர்வதோ
தேறேன் யான் இது தேவர் மாயமோ
வேறு ஓர் வாலி கொல் ஆம் விளிந்துளாள்

**(கம்பராமாயணம்-வாலி வதைப் படலம்)**

இறுதியாக அந்தப் பெண் ஒரு முடிக்கு வருகின்றாள். வாலி உன் நெஞ்சிலே நான் இல்லை. உன் நெஞ்சிலே நான் இருந்திருந்தால் உன் நெஞ்சைத் துளைத்த அம்பு என்னையும் அங்கு கொன்றிருக்கும். நான் உயிரோடு இருக்கின்றேனே.

அதுபோல என் நெஞ்சிலும் நீ இல்லை. என் நெஞ்சிலே நீ இருந்திருந்தால் அரண்மனையிலே என்னோடு பாதுகாப்பாக இருந்திருப்பாய். இப்படி இங்கு வந்து நீ மட்டும் தனித்து உயிர் விட்டிருக்க மாட்டாய். இந்த இரண்டுமே நடக்காத காரணத்தால் நாங்கள் இருவரும் கணவன் மனைவியாக அன்போடு வாழ்ந்தும் ஒருவர் மனத்திலே ஒருவர் இருக்காமல் போய்விட்டோமே என்று அழுதாள் அந்தப் பெண். வாலியின் மனைவியாக வாழ்ந்த அந்தப் பெண்ணின் பெயர் தாரை.

செரு ஆர் தோள நின் சிந்தை உளேன் எனின்,
மருவார் வெஞ் சரம் எனையும் வவ்வுமால்
ஒருவேனுள் உளை ஆகின் உய்தியால்
இருவே முள் இருவேம் இருந்திலேம்.

**(கம்பராமாயணம்-வாலி வதைப் படலம்)**

தாரையின் வாய்மொழியாக வரும் இந்தப் பாடலைக் கம்பன் திருக்குறளில் இருந்து எடுத்துக் கொண்டான். என் காதலன் எனது நெஞ்சுக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அதனால் அவனுக்குச் சுடும் என்று அஞ்சி நான் சூடான உணவு எதையும் உண்பதில்லை என்று திருக்குறளிலே ஒரு பெண் தன் தோழிக்குச் சொல்லுவாள்.

நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேப்பாக்கு அறிந்து

**(திருக்குறள் -1128)**

இவ்வாறு திருக்குறளைக் கம்பன் வாலி வதைப்படலத்துக்கு எடுத்துப் போக கவிஞர் வாலியோ அந்தத் திருக்குறளை திரை உலகத்துக்கு எடுத்துக்கொண்டு வந்தார். அதுதான் காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதடி என்ற வைதேகி காத்திருந்தாள் படப் பாடலில் வரும் நெஞ்சுக்குள்ளே எந்தநாளும் நீதான் வாழுறே என்ற வரிகள்.



பொன்னையா விவேகானந்தன்

## மரபும் மாண்பும் 27

# புறஞ்சார் பண்பாட்டு நடத்தைகள் - புரிதலும் பேணலும் - 3

புறஞ்சார் பண்பாட்டு நடத்தைகள் பலவற்றை ஆழமாகவும் விரிவாகவும் புரிந்துகொள்ளும் நோக்கோடு கடந்த கட்டுரையில் வணக்கம் குறித்துப் பார்த்தோம். இதன் தொடர்ச்சியாக அடுத்து நிறைகுடம் வைத்தல் என்ற பண்பாட்டு நடத்தையினைச் சற்று விரிவாக நோக்குவோம்.

தமிழர் வாழ்வியலில் நிறைகுடம் வைக்கும் மரபு எப்போது தோற்றம் கொண்டது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளைக் கண்டறிவது மிகக் கடினமாகவே உள்ளது. எனினும் வழிபாட்டு நெறிகளுக்குரிய ஆகம மரபுகள் பல, தமிழர் வாழ்வியலில் கலப்புறத் தொடங்கியதன் விளைவாகவே நிறைகுடம் வைக்கும் மரபு தோற்றம் பெற்றிருக்கலாம் எனச் சில ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழிலக்கியமான பழமொழி நானூறு நிறைகுடம் நீர்தளும்பல் இல்'எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் இத்தொடர் நிறைகுடம் வைக்கும் மரபுடன் தொடர்புபடவில்லை. சங்கவிலக்கியங்களில் நிறைகுடம் வைத்து நிகழ்வுகள் நடந்தமைக்கான சான்றுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆரிய வழிப்பட்ட ஆகம மரபுகளில் இது பூரண கும்பம் அல்லது பூரண கலசம் என அழைக்கப்படுகின்றது. உலகமும் அதிலுள்ள உயிரினங்களும் அவற்றினது ஆன்மாக்களும் நீரிலிருந்தே உண்டாகின்றன என்றும் மறுபடியும் அவை நீரிலேயே கலந்து விடுகின்றன என்றும் வேதங்கள் கூறுவதாகவும் - ஆதலால் இறைவனை நீரின் மூலம் உருவ வழிபாட்டுக்குக் கொண்டு வருவதே பூரண கும்பம் வைப்பதன் நோக்கும் என்றும் வழிபாட்டுநெறி சார்ந்தோர் கூறுகின்றனர்.

வேதியர் சடங்குகளிலும் இந்து ஆலயங்களிலும் முதன்மை பெற்றிருக்கும் பூரண கும்பம், கி.பி ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரான பக்திகாலத்தில் அல்லது அதற்குப் பின்னர் தமிழரின் பொது வாழ்வில் இடம் பிடித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. கம்பர் இராமாயணத்தில் நிறைகுடத்தை முழுமதிக்கு ஒப்பிடுகின்றார். நாயக்கர் காலத்துக்குப் பின் தோன்றிய சில பக்தி இலக்கியங்களிலும் நிறைகுடம் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

எது எவ்வாறாயினும் நிறைகுடம் வைக்கும் மரபு தமிழரிடத்தில் ஆழமாக வேரூன்றி, பண்பாட்டு அடையாளமாக நிலைபெற்றுவிட்டது. கிறித்தவமும் இசுலாமும் தமிழரிடையே பரவுவதற்கு முன்னரே நிறைகுடம் வைத்தல் தமிழரிடையே நிலைபெற்றிருக்க வேண்டும். தமிழகத்தில் இப்போதும் சிறிதளவு கிறித்தவர்களும் இசுலாமியர்களும் நிறைகுடம் வைத்து நிகழ்வுகள் நடத்துவதைக் காணலாம். ஈழத்தில் கிறித்தவர்கள் பலர் இன்றும் நிறைகுடம் வைத்து நிகழ்வுகள் நடத்துவதைக் காணலாம்.

வேதிய மரபுகள் தமிழ் மக்களின் அன்றாடச் செயற்பாடுகளில் கலப்புறத் தொடங்கிய பின்னரே நிறைகுடம் வைக்கும் மரபு தோற்றம் பெற்றிருக்கலாம் என முன்னரே குறிப்பிட்டிருக்கின்றேன். வேதியர்களின் வேதங்களும் சடங்குகளும் மறுக்கப்பட்ட பஞ்சமர் எனப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களும் தமது நிகழ்வுகளில் நிறைகுடம் வைக்கும் மரபை கைக்கொள்ளத் தொடங்கினர். இதுவே நிறைகுடம் வைத்தல்"இ'வேதிய வழிபாட்டு மரபைச் சார்ந்தது'என்ற கருத்தாக்கத்தில் இருந்து விலகி, தமிழரின் பண்பாட்டு அடையாளமாக நிலைபெறத் தொடங்கிய இடமாகும்.

இன்று உலகெங்கும் தமிழர்கள் அனைவரும் வேறுபாடின்றி நிறைகுடம் வைத்தே நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றனர். தாயகத்தை விட்டகன்று உலகின் பல பகுதிகளிலும் குடியேறி பல்லினப் பண்பாட்டு சமூகத் தளங்களில் வாழும் தமிழர்களின் மூத்த தலைமுறையினர் இப்பண்பாட்டு நடத்தையை வலுவாகப் பின்பற்றி வருகின்றனர். எனினும் தோன்றி வளரும் புதிய தலைமுறையினர் நிறைகுடம் வைத்தல் தொடர்பான வினாக்களை எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

நிறைகுடம் வைத்தல் என்ற இந்த செயற்பாட்டின் இலக்கு என்ன? இதன் விளக்கம் என்ன? என்ற வினாக்கள் அவர்களிடத்தே தோன்றியுள்ளன. அலைவுப் புலங்களில் வாழும் இளையோரின் வாழ்களச் சூழல் அவர்களை இவ்வாறே வினக்களை எழுப்பத் தூண்டும். மரபுகள், பண்பாட்டு நடத்தைகள் எதுவானாலும் உரிய விளக்கமின்றிப் பின்பற்றிச் செல்வதை அவர்கள் ஒப்ப மாட்டார்கள். மூத்தோர் முன்னெடுக்கும் பல பண்பாட்டு நடத்தைகளுக்கு பொருத்தமானதும் போதியதுமான விளக்கம் அவர்களுக்குக் கிடைக்கவில்லையெனில், அந்த நடத்தைகளை இளையோர் தள்ளி நின்று கேலிக்குரிய தோரணையுடன் நோக்குவர்.

அலைவுப் புலங்களில் வாழும் பலருக்கும் பண்பாடுசார் நடத்தைகளின் முழுமையான விளக்கங்கள் தெரிந்திருக்கவில்லை. தாயகத்தில் தலைமுறைவழியாகப் பண்பாட்டு நடத்தைகளைப் பின்பற்றிச் செல்வதே வழக்கம். அவற்றுக்கான விளக்கங்களைத் தெரிந்துகொள்ள முயன்றோர் மிகச் சிலரே.

நிறைகுடம் வைத்தல் தொடர்பாகப் பிள்ளைகள் எழுப்பும் வினாக்களுக்குப் பல பெற்றோர்களால் விடை கொடுக்க முடிவதில்லை. இதையும் கருத்திற்கொண்டே இக்கட்டுரைத் தொடர் படைக்கப்பட்டு வருகின்றது.

நிறைகுடம் வைத்தல் இறைவழிபாட்டு நெறி சார்ந்தது என ஒரு தரப்பினரும் சாராதது என மற்றுமொரு தரப்பினரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். இந்த நடத்தை ஆகம மரபுகளின் வழியே இறைவழிபாட்டுக்குரிய செயலாகவே தமிழரிடையே நுழைந்தது என்ற கருத்தை மறுப்பதற்கில்லை. ஆனால் அது ஆகம எல்லைகளைக் கடந்து தமிழரிடையே பொதுப் பண்பாட்டு நடத்தையாக உருக்கொண்ட பொழுதில் இது முற்றுமுழுதான இந்துமத வழிபாட்டுநெறியைத் தழுவியதாக இருக்கவில்லை. மதப்பொதுமையுடன் கூடிய மானுடப்பண்பு மிக்கதான செயல்வடிவத்தையே இது கொண்டிருந்தது. இதனாலேயே இந்துக்கள் அல்லாத தமிழரும் ஒடுக்கப்பட்ட மக்களும் நிறைகுடம் வைத்தலைப் பண்பாட்டு நடத்தையாகக் கருதிக் கைக்கொண்டனர். இதன் அடிப்பபடையிலேயே நாம் நிறைகுடம் வைத்தலை நோக்குவது சிறப்பானதாக இருக்கும்.

குயின்ரஸ் துரைசிங்கம்



# தெரிந்ததில் தெரிந்தது - 1

## ஆண்களையும் வாழ விடுங்கள்!

திருமணமாகி குடும்ப வாழ்வில் இணையும் ஆண்கள் பலரும், ஒரு சில ஆண்டுகளில் தங்களது இறுக்கங்களிலிருந்து தளர்ந்து, படிப்படியாக, சொல்வதை மட்டும் செய்துவிட்டு அடங்கிவிடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்கிறது அண்மைய புள்ளிவிபரம் ஒன்று. அல்கொங்குய்ன் கல்லூரியினால் 2020ற்குப் பின்னர் எடுக்கப்பட்ட நீண்டகால ஆய்வின் பின்னர் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை ஒன்றில், திருமணமான கணவன்மாரில் மூன்றில் ஒருவர் மனதளவில் துன்புறுத்தப்படுகிறார் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

2016ல் ஐந்தில் ஒருவர் பாதிக்கப்படுவதாகக் காணப்பட்ட இந்நிலை, நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்திருப்பது ஆபத்தான வளர்ச்சியாகவே கோடிட்டுக் காட்டப்படுகிறது. திருமணமாகும்போது மிக கௌரவமாகவும், அடக்கமும் அன்பும் நிறைந்தவராகவும், அத்தனை விடயங்களிலும் விட்டுக்கொடுத்துப் போகும் நிலையில் குடும்ப வாழ்வில் இணைந்து கொள்ளும் பெண்கள், நாளடைவில் தங்களது நிலைமைகளையும் ஆரம்பகால சவால்களையும், தங்களது குடும்பத்தில் இருந்த சிரமங்களையும் மறந்து விடுகிறார்கள்.

பிடிக்கவில்லை என்பதற்காக, குடும்பத்தையே தூக்கி எறிந்துவிட்டுப் போகின்ற மேற்குலக கலாசாரத்திற்கு கொஞ்சமேனும் பழக்கப்படாத எம்மவர்கள், கொஞ்சம் பொறுக்கலாமே என்று இறங்கிப்போக, அதையே வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்ற பல பெண்களும், தங்கள் கணவன்மாரை அளவுக்கு அதிகமாக உடலளவிலும் மனதளவிலும் துன்புறுத்துகின்ற நிலைமைகள் மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

தாங்கள் இறங்கிப் போகிறோம், தங்களது அடிப்படை வசதிகள்கூட கிடைப்பதில்லை என்பதையெல்லாம் வெளியே சொல்லி வெட்கப்பட விரும்பாத ஆண்கள், வெளியில் நடிப்பதும் மனதளவில் உடைந்துபோய் நலிவடைந்து போவதும் அதிகரித்து வருவதாக புதிய ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2019ற்கு முன்னர், 9 வீதமான ஆண்கள் திருமண வாழ்வில் துன்புறுத்தப்படுவதாகக் கூறும் பக்சிக்கா சவேஜ் ஆய்வறிக்கை, கோவிட்-19 காலத்தில் இது 17 வீதமாக உயர்ந்திருப்பதையும் தனது 2021 ஆய்வறிக்கையில் பதிவுசெய்துள்ளதுடன், இது ஆசிய இனத்தவரிடையே மிக அதிக அளவில் காணப்படுகின்ற போதிலும், இது குறித்து சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆண்கள் அதிகம் முன்வருவதில்லை என்பதையும் பதிவு செய்துள்ளது.

தங்கள் வீட்டில் தங்களுக்கு மதிப்பில்லை, உரிய கௌரவம் வழங்கப்படுவதில்லை, யாரும் கணக்கெடுப்பதாய் இல்லை, ஒரு மனிதராய்க்கூட மதிப்பதில்லை என்பதையெல்லாம், வெளியே சொல்லிவிட்டால், வெளியில் நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் இருக்கின்ற கொஞ்ச மதிப்பும் பறிபோய், அவர்களும் தம்மை கேவலமாய்ப் பார்ப்பார்களே என்ற அச்சத்தில், தங்கள் துயரங்கள் எதையும் வெளியே சொல்லாமல், உள்ளே வைத்து, வெந்து வெந்து வேதனைப்பட்டு, மனஅழுத்தத்திற்கு உள்ளாகி, அதனால் தவறான பாதைகளைத் தேடி ஓடும் ஆண்கள் பலர்.

Office of the Federal Ombudsman for Victims of Crime (OFOVC) என்ற கனடிய மத்திய அரசின் ஆய்வு அலுவலகத்திற்காக 2020ம் ஆண்டு ஒகஸ்ட் 14ம் திகதி வெளியான ஆய்வறிக்கையில், பின்வரும் முடிவுரை வழங்கப்பட்டுள்ளது:

Men in Canada experience intimate partner violence (IPV) in significant numbers, though it is rarely discussed. From research, to policy, to service delivery, there tends to be more emphasis placed on the problem of violence against women (VAW), and rightly so. Women continue to be murdered by their intimate partners, seek medical care for injuries resulting from physical or sexual assaults, and lose access to housing more frequently than male survivors (Conroy, Burczycka & Savage, 2019). However, the number of women affected by IPV often overshadows the experiences of male survivors who report difficulty accessing help or navigating the legal system (Cook, 2009; Dutton 2012, Fortin, 2011; Moreau 2019).

தங்கள் ஆண் துணையால் தொடர்ச்சியாக உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்படுவதுடன் கொல்லப்படுகின்ற பெண்கள் அதிகம். எனினும், இதற்கு வழங்கப்படுகின்ற கவனமும் சட்டதிட்டங்களும் ஆய்வுகளும், ஆண்கள் தங்களது பெண் துணையால் பாதிக்கப்படுவது தொடர்பாக வழங்கப்படுவதில்லை. இத்தகைய துன்புறுத்தல்களை ஆண்கள் முறையிடும்போதுகூட, அதற்கு போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை என்கிறது இந்த ஆய்வு.

மேற்குலக கலாசாரத்தின்படி, பிடிக்காவிட்டால் விலகிப்போய் புதியதொன்றைத் தேடிக்கொள் என்ற பண்பாட்டிற்குப் பழக்கப்படாத தமிழர்கள், தங்கள் பிள்ளைகளுக்காக, அத்தனை துன்பங்களையும் உள்வாங்கி, தாமே தமக்குள் கவலைப்பட்டு, வாழ்ந்து மடியும் துயரத்தை, யாரும் அதிகம் கண்டுகொண்டதாய்த் தெரியவில்லை. அத்தனை பெண்களுமே இப்படி தங்கள் கணவர்களை கேவலமாய் நடத்துவதாக இங்கே யாரும் அர்த்தப்படுத்தவில்லை. கணவர்களுக்கு போதிய மரியாதை கொடுத்து, அவர்களோடு இணைந்து ஒன்றித்து வாழ்கின்ற பல குடும்பங்கள் இருக்கவே செய்கின்றன.

பல மனைவிமார், தங்கள் கணவர்களை மதிப்போடு நடத்தவே செய்கிறார்கள். ஆனால், எமது தமிழ் சமூகத்தில், தங்கள் கணவர்களை அளவுக்கு அதிகமாக மனதளவில் வதைக்கும் பெண்கள் அதிகரித்து வருவதாக வெளிவருகின்ற செய்திகள் கவலை அளிக்கவே செய்கின்றன. இது திட்டமிடப்பட்டு செய்யப்படுகின்ற கைங்கரியமாக இல்லாவிட்டாலும், திருமணமாகி ஒருசில ஆண்டுகளின் பின்னர், பெண்கள் தங்கள் செயற்பாடுகளில் ஆண்களை ஓரம்கட்டுவதும், ஓரவஞ்சனை செய்வதும், பொது இடங்களில் மதிப்பின்றி நடத்துவதும், ஏனையவர்களிடம் தங்கள் கணவனைப்பற்றி தரக்குறைவாகப் பேசுவதும் அதிகரித்து வருவதையே காணமுடிகிறது.

(அடுத்த இதழிலும் வரும்)



அ. முத்துலிங்கம்

# விருந்தாளி

ஏப்ரல் மாதம் வந்ததும் அதிகாலையிலேயே ரொபினின் சத்தம் கேட்கத் தொடங்கும். வசந்தம் வரும்போது பறவையும் வந்துவிடும். பனிக்காலங்களில் ஒரேயடியாக மறைந்து - போன பறவை அதன் இருப்பை அறிவிப்பதற்கு எழுப்பும் இனிய ஒலி காலை வேளைகளை நிரப்பும். அதன் பாடல் ஏற்ற இறக்கத்துடன் அதன் மொழியில் அதன் ஸ்வரத்தில் இருக்கும்.

எங்கள் வீட்டுக்கு ஒவ்வொரு வருடமும் ரொபின் வரும். கடந்த மூன்று வருடங்களாக அவை வருவது தவறுவதில்லை. மஞ்சள் சொண்டு, செம்மஞ்சள் மார்பு, கறுப்பு தலை, இறகும் வாலும் சாம்பல் நிறத்தில் இருக்கும் பெண் குருவி. அதன் நிறம் தண்ணீரில் கலந்ததுபோல சற்று மங்கலாக இருக்கும். ஆண் குருவியின் நிறம் இன்னும் கொஞ்சம் அதிகம் பளிச்செனத் தெரியும். எங்கள் வாசல் கதவிலிருந்து மூன்றடிக்கும் குறைவான தூரத்தில் தூணுக்கும் சுவருக்கும் கூரைக்கும் இடைப்பட்ட முக்கோணத்தில் உள்ள கதகதப்பான இடம் அதற்கு சொந்தமானது.

போன வருடம் கட்டிய கூடு முற்றிலும் சிதைந்துபோய் கிடந்தது. அதை இழுத்து அப்புறப்படுத்திவிட்டு புதுக்கூடு கட்டத் தொடங்கின. பெண்குருவி தும்பு, களிமண், புல், குச்சி என்று ஒவ்வொன்றாக கொண்டுவந்து பொறுமையாக கட்டியது. ஆண் குருவி அவ்வப்போது ஒரு குச்சியை தூக்கிக்கொண்டுவந்து கொடுக்கும், ஆனால் பெண்குருவிதான் கூட்டை முழு அக்கறையோடும் பொறுப்போடும் கட்டியது.

நான் வாசல் கதவை பூட்டிவிட்டு முன்னுக்கு ஓர் அறிவித்தலை தொங்கவிட்டேன். "இந்த வாசல் மூடப்பட்டுவிட்டது. விருந்தாளிகள் பின்பக்க வாசலை பயன்படுத்தவும்." கதவிலே ஒரு கண்ணாடி இருந்தது. அதன் வழியாக குருவியின் நடமாட்டத்தை தினமும் கண்காணிக்கக்கூடியதாக இருந்தது. போன வருடம் போல இந்த வருடமும் குருவி நாலு முட்டைகளை இட்டது. பச்சை நிறத்தில் இருந்த முட்டைகளின்மேல் உட்கார்ந்து குருவி பகலும் இரவும் அடைகாத்தது. காலையிலும் மாலையிலும் அது போய் இரை தேடும். மீதி நேரத்தில் நான் எப்பொழுது எட்டிப் பார்த்தாலும் யோசனையான முகத்துடன் முட்டைகளின்மேல் அசையாமல் உட்கார்ந்திருக்கும்.

ஒருநாள் காலை நான் பார்த்தபோது வழக்கம்போல கூட்டுக்கு நடுவில் உட்காராமல் கூட்டு விளிம்பில் உடகார்ந்திருந்தது. இத்தனை காலம் உழைத்தது வீணாகிவிட்டதே. முட்டை பொரிக்கவில்லை போலிருக்கிறது, விரைவில் போய்விடும் என்று நினைத்தேன். அப்படி நடக்கவில்லை. ஆனால் தொடர்ந்து மூன்று நாட்கள் அப்படியே உட்கார்ந்திருந்தது. நாலாவது நாள் மர்மம் துலங்கியது. முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளியே வந்துவிட்டன அதுதான் குஞ்சுகளின்மேல் இருக்காமல் கூட்டின் விளிம்பில் அமர்ந்திருந்தது. குஞ்சுகள் எப்பவும் சொண்டை விரித்தபடி தலையை வெளியே நீட்டிக்கொண்டு காத்திருந்தன. தாய்க்குருவி வெளியே போய் இரைதேடி வந்து குஞ்சுகளுக்கு ஊட்டிவிட்டது.

தாய் குருவி நிலத்திலே நடப்பது பார்க்க வேடிக்கையாக இருந்தது. இரண்டு மூன்று அடிவைத்து நடந்து நிமிர்ந்து நிற்கும். மேலும் சில அடி நடக்கும் - போது விழும். குடித்துவிட்டு நடப்பது போல பல தடவை நின்று தலையை சாய்த்து பார்க்கும். நீண்ட புழுவை பிடித்து அப்படியே தலையை ஆட்டி முழுங்கிவிடும். ஒரு குருவிக்கு ஒரு நாளைக்கு 14 அடி புழு தேவை. நாள் முழுக்க திரும்ப திரும்ப புழுக்களை பிடித்து வந்து ஊட்டும். சிலசமயம் ஆண் குருவி வரும். ஒருமுறை ஆண்பறவை குஞ்சுகளுக்கு உணவு கொடுக்கும்போது அங்கேயிருந்த தாய் பறவைக்கும் கொடுத்தது.

வட அமெரிக்காவில் எவ்வளவு சனத்தொகை உண்டோ அதே அளவுக்கு ரொபின்களும் அங்கே இருப்பதாக புள்ளிவிவரம் சொன்னது. அவை அழிந்துவிடும் அபாயத்தில் இல்லை. முன்புபோல் ரொபின்களை இப்போது யாரும் வேட்டையாடுவதில்லை. பருந்து, வல்லூறு, பூனை போன்ற எதிரிக - ளால் ஆபத்தும் குறைவு. சரியாக 14 நாள் கழிந்ததும் குஞ்சுகள் செட்டை வலுவாகி பறக்கத் தொடங்கின,. இவற்றினுடைய அந்நியோன்யமான குடும்ப வாழ்க்கை இந்த 14 நாட்கள்தான். அதன் பின்னர் குஞ்சுகள் பறந்துபோய் தனி வாழ்க்கை ஆரம்பித்துவிடும். இவ்வளவு அன்பாகவும், கரிசனையாகவும், ஆதரவாகவும் கூடு கட்டி, முட்டையிட்டு, பொரித்து, உணவூட்டி காப்பாற்றி குஞ்சுகள் வளர்ந்ததும் அவை யாரோ இவை யாரோ என்றாகிவிடும்.

குருவிகள் பறந்ததும் என் வீட்டு வாசல் கதவு திறக்கப்பட்டு அறிவிப்பும் அகற்றப்பட்டது.

ஆகஸ்டு மாதம் முடியும் தறுவாயில் ரொபின்கள் நீண்ட பயணத்துக்கு தம்மை தயார் செய்யும். 2200 மைல் பயணம் செய்து மெக்ஸிக்கோவுக்கு போகும். மெக்ஸிக்கோ எல்லைக்குள் நுழைந்ததும் அவை பெயரை பெற்றிரோஜோ என மாற்றிக்கொள்ளும். அவற்றின் சங்கீதமும், மொழியும், ஸ்வரமும் மட்டும் மாறுவதில்லை.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் பெற்றிரோஜோ மறுபடியும் 2200 மைல் பயணம்செய்து என் வீட்டுக்கு வரும். அதே தூண், அதே சுவர், அதே கூரை, அதே முக்கோணத்தை கண்டுபிடித்து இன்னொரு புதுக்கூடு கட்டும். இப்பொழுது அதன் பெயர் பழையபடி ரொபின் ஆகிவிடும். முன்பு பாடிய அதே பாடலை அதே மொழியில் அதே ஸ்வரங்களுடன் பாடும். நான் வாசல் கதவை பூட்டுவேன். "இந்த வாசல் மூடப்பட்டுவிட்டது. விருந்தாளிகள் பின்பக்க வாசலை பயன்படுத்தவும்." என்ற அறிவித்தலை தொங்கவிடுவேன்.

ரொபினிலும் பார்க்க முக்கியமான விருந்தாளி யார் எனக்கு வரப்போகிறார்கள்?

**தமிழர் தகவல் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றிய அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் அவர்கள் விழா பற்றிய தனது மனப்பதிவை எழுத்தில் வடித்ததின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகியுள்ளது.**

# விழா எடுத்துப் பார்! விழா நடத்திப் பார்!

2022, ஜூன் 30 - நேரம் பிற்பகல் 1.30. இடம்-ரொறன்ரோ, கனடா.

முப்பது ஆண்டுகளைக் கடந்த 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் வெற்றி விழாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். நாம் பயணித்துக் கொண்டிருந்த வாகனம், ஸ்காபரோவிலிருந்து ரொறன்ரோ நகர மையப்பகுதியை நோக்கி நத்தை வேகத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது. வாகனத்துள் அடியேனும், லண்டனிலிருந்து வந்த சகோதரர் எஸ்.கே. ராஜெனும்.

வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த கனடியத் தமிழோசை சிறீகாந்தாவோ பொறுமையை இழந்து தவிப்பது புரிந்தது. சாதாரணமாக நாம் தங்கியிருந்த இடத்திலிருந்து விழா நடைபெறும் இடத்திற்குப் போக (27 கிலோ மீற்றர்) அரைமணி நேரமே போதுமாம். ஆனால் முன்னும் பின்னும் ஆயிரக்கணக்கான வாகனங்கள். ஒரு அடி நகர பல நிமிடங்கள் எடுத்தன.

மூன்று மணிக்கு ஆரம்பமாகும் விழாவுக்காக, பிற்பகல் ஒரு மணிக்கே புறப்பட்டு விட்டோம். ஆனாலும், நெடுஞ்சாலையை வந்தடைந்த பின்னர், கடிகாரம் மட்டும் கடுகதியில் ஓடியதே தவிர கடுகளவும் முன்னேற முடியாமல் தவித்தார் சிறீகாந்தா. அவரைச் சமாதானப்படுத்த, விழா ஆரம்பம் மூன்று மணிக்குத்தானே பொறுமையாகப் போவோம் என்றோம். இல்லையில்லை திரு. திருச்செல்வம் 2.30க்குள் மண்டபத்துக்குள் அமர வேண்டு -மென அழைப்பிதழில் தெரிவித்துள்ளார் என்றார்.

அதற்கென்ன? தமிழ் நிகழ்சிகளை யார் குறித்த நேரத்தில் ஆரம்பிப்பார்கள். 3:30க்குள் போனால் போதும் என்று நாம் சொன்னதும், அவர் சொன்ன பதில் வியப்படைய வைத்தது. தமிழர் தகவல் ஆசிரியர் திருச்செல்வம் குறித்த நேரத்தில் ஆரம்பித்துக் குறித்த நேரத்தில் நிகழ்ச்சியை நிறைவு செய்வதில் கண்டிப்பானவர். யார் வந்தாலும் யார் வராவிட்டாலும் இந்த ஒழுங்கு விதியை 30 ஆண்டுகளாகப் பேணி வருபவர் என்று பதற்றத்துடன் சொன்னார். அவரது பதற்றம் இப்போது எம்மையும் தொற்றிக்கொண்டது. திடீரென்று ஒரு சிறு இடைவெளி. ஒருவாறு ரொறன்ரோ நகர மண்டப வாயிலைச் சென்றடைய 2.45 ஆகி-விட்டது. எங்களுக்கு முன்னால் பலர் மூச்சிரைக்க (ஓடாத குறையாக) நடந்து போய்க்கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. எனது வாழ்நாளிலே, ஒரு தமிழ் நிகழ்வில் இதுவரை நான் கண்டிராத புதுமையல்லவோ இது என வியந்தவாறே அங்கத்தவர் சபா பீடத்துள் (Council Chamber) நுழைந்தபோது, இன்முகத்தோடு வரவேற்றார் திரு. திருச்செல்வம். எமக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் சென்றமர்ந்தோம். ஒரு பாராளுமன்ற சபாமண்டபத்துள் வந்து அமர்ந்தது போன்ற உணர்வைத் தரும் சூழல்.

நேரம் பறந்தோடியது. அழைப்பிதழில் குறிப்பிட்டவாறு நேரம் மிகச்சரியாக 3 மணி - விழா ஆரம்பமானது. நுண்கலைப் போதனாசிரியை செல்வி ஐஸ்வரியா சந்துரு தலைமையேற்று வழி நடத்த, செல்வன் அக்ஷேய் ஜெயபாலசிங்கம் தமிழில் தொடக்க உரை நிகழ்த்தியபோது நெஞ்சு குளிர்ந்தது. காரணம்! நான் செல்லுமிடமெல்லாம் சொல்லிவரும் செய்தி - நமக்குள்ளே பழம் பெருமை பேசுவது போல் வாழ்வின் நடுப்பகுதியைக் கடந்தவர்கள், அல்லது இளைப்பாறும் காலத்தை நெருங்கிக் கொண்டிருப்பவர்கள், தமிழின் மாண்பினை சிலாகித்துப் பேசுவதையும், அதே வயதொத்த-வர்கள் கேட்டுப் புளகாங்கிதம் அடைவதையும் விட, இன்றைய காலத்தின் தேவை - 'நமது பார்வை' அடுத்த தலைமுறையை நோக்கியதாக அமைய வேண்டும் என்பதே. வளரும் தலைமுறை தமது தாய்மொழி அடையாளத்தைப் பெருமையுடன் பேண வேண்டும் என்றால், இப்போதிருந்தே அவர்களை நம் பக்கம் ஈர்த்துத் தயார்படுத்த வேண்டும். அந்த எண்ணத்தைத் தூரநோக்குடன் திரு. திருச்செல்வம் செயல்படுத்தி வருகிறார் என்றே எனக்குத் தோன்றியது.

தொடக்க உரை நிகழ்த்திய அச்சிறுவனுக்கு சுமார் 15 வயது இருக்கலாம். மிகுந்த அக்கறையுடன் ஒவ்வொரு சொல்லையும் தெளிவாக உச்சரித்து, சிறப்புற நிகழ்த்தினார். பிறமொழியைச் சார்ந்தவர்கள் எமது தமிழ் மொழியைப் பேசக் கேட்கும்போது உண்டாகும் மகிழ்ச்சியைவிட இருமடங்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. காரணம், அந்த மண்ணில் பிறந்த நம் தலைமுறை ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய உச்சரிப்பினை அக்கறையுடன் பேணி உரையாற்றியபோது 'இன்பத்தேன் வந்து பாய்ந்தது காதினிலே'. (விழா நிறைவடைந்த பின்னர் அச்சிறுவன் என்னை அணுகி, தன்னுடைய தமிழ் உச்சரிப்பு எப்படி இருந்தது என ஆர்வத்துடன் கேட்டபோதும், என்னுடன் சேர்ந்து நிழற்படம் எடுத்துக்கொண்ட போதும் எனக்கும் பெருமையாக இருந்தது).



தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இசைக்க வந்தவரும் ஒரு இளைஞர். புலம்பெயர்ந்து வாழும் மண்ணிலே பிறந்து வளரும் இளைய தலைமுறையின் பிரதிநிதியாகிய செல்வன் கிரிசன் தனஞ்ஜெயன் தமிழுக்கு நோகாமல் சொற்களை உச்சரித்து இதமான குரலில் இனிமையாகப் பாடினார்.

தமிழர் தகவல் பொது முகாமையாளர் ஆர்.ஆர்.ராஜ்குமார் வரவேற்புரை நிகழ்த்த, திரு. எஸ்.கே. ராஜென் வாழ்த்துரை வழங்க, செல்வி ஐஸ்வ-ரியா சந்துரு தலைமை உரை நிகழ்திய பின்னர், தமிழர் தகவலின் 30 ஆண்டுகளைக் கடந்த மகிழ்வின் அடையாளமாக 'இளமகிழ் சுவடு' ஆண்டு மலரை ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையின் பன்மொழித் திட்ட அலுவலர் திரு. பொன்னையா விவேகானந்தன் வெளியிட்டு வைத்து உரையாற்றினார். ஆண்டுமலரை மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்தபோது, 30 வயதின் இளமைத்துடிப்புடன் 'இளமகிழ் சுவடு' திகழ்வதை உணரக்கூடியதாக இருந்தது. முதல் பிரதிகளை உதவி ஆசிரியர் சசிகரன் பத்மநாதன் இரண்டு இளம் எழுத்தாளர்களுக்கும் மூத்த எழுத்தாளர் ஒருவருக்கும் வழங்கி மதிப்பளித்தார்.

விழாவில் சிறப்புரையாற்ற அடியேனை அழைத்தபோதுதான், பேச நினைத்திருந்த கருத்துகளுக்கு ஒரு 'தலைப்பு' சட்டென்று மனத்தி-ரையில் பளிச்சிட்டது. கடந்த சில நாட்களாகவே, என் மனதைக் குடைந்து கொண்டிருந்த கேள்விகளின் பிரதிபலிப்பாகவுமே அந்தத்

→

தலைப்பு அமைந்தது - அது 'எங்கள் வீட்டுப் பூனைகளும், உங்கள் வீட்டுப் பிள்ளைகளும்'. "மகாகவி பாரதியின் வெள்ளை நிறத்தொரு பூனையைப் போலவே எங்கள் வீட்டிலும் ஒரு தாய்ப்பூனை ஈன்ற குட்டிகளில், இரண்டு பூனைகள் மட்டும் எஞ்சியுள்ளன. இரண்டும் ஒரே நிறம். இரண்டாண்டுகளுக்கும் மேலாக எங்களோடு உண்டு உறங்கி அந்நியோன்மாக வளர்ந்து வருகின்றன. சொன்னால் ஆச்சரியம், அந்தப் பூனைகளுக்கு ஒரு சில தமிழ் சொற்கள் நன்றாகப் புரியும். தமிழ் மட்டுமா? சில ஆங்கிலச் சொற்களும் புரியும். நாம் இடும் கட்டளைகளுக்கு உட்பட்டு சொன்னபடி கேட்டு நடக்கும். இது சாத்தியமா? என்றால் இணையத் தளத்தில் யூடியூபில் பல பூனைகள் சான்று சொல்கின்றன.

செவிவழியாக ஒலிவடிவில் செல்லும் மொழி, ஐந்தறிவுள்ள பூனைக - ளுக்கே நாளடைவில் புரிகிறது. பேசும் ஆற்றல் இல்லாவிடினும் மொழி அவற்றுக்குப் பரிச்சியமாகி விடுகிறது அல்லவா? அவ்வாறு உங்கள் தலைமுறைகளும் தமிழைப் புரிந்துகொள்ளவும் பேச முயலவும், அவர்களது காதுகளில் நம் தாய்மொழியாகிய தமிழ், ஒலிவடிவில் போய்ச்சேர வேண்டுமே. அதற்கு உங்களது வீட்டுமொழி தாய்த் தமிழாக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்திப் பேசினேன்.

ஆங்கில மொழி பேசப்படும் நாடுகளை விட, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்ப்பெற்றோர்கூட, அந்தந்த நாட்டு மொழிகளை தமக்குப் பரிச்சியப் படுத்திக்கொள்ள தம் பிள்ளைகளையே நம்பியிருப்பதால், பெரும்பாலான நாடுகளில் வீட்டுமொழியாகவேனும் தமிழ் உச்சரிக்கப் படுவதில்லை" என்பதையும் எடுத்துரைத்தேன்.

விழாவினை தமிழ் - ஆங்கிலம் என இரு பிரிவுகளாக அமைத்து நடத்திய நேர்த்தியும் வேறெங்கும் காணாத புதுமை. உலக மொழிகளுள் பரவலாக எல்லா நாடுகளிலும் பயன்படும் ஆங்கில மொழி, தமிழைப் பொறுத்த அளவில் தவிர்க்கவே முடியாத இணைப்பு மொழியாக தமிழகத்திலேயே மாறிவிட்ட காலச்சூழலில், நம்மவர் புலம்பெயர்ந்து வாழும் கனடிய மண்ணில் குறிப்பாக ஒன்ராறியோ மாகாணத்தில், இது அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையாகவே எமக்குத் தோன்றியது. அதிலும் ஒன்ராறியோ மாகாண ஆட்சித்துறைப் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்த விழாவுக்குப் பொருத்தமான 'விழா நாகரிகமாகவே' விளங்கியது. தமிழர் தகவலின் ஆண்டு விழாக்க -வில், தமிழ்ச் சமூகத்தின் சிறந்த ஆளுமைகளுக்கு விருது வழங்கி மாண்பேற்றுவது ஒரு சிறப்பம்சம்.

## 'விழா நாகரிகம்' எனும் நூல் வெளிவரவேண்டும்

விண்ணப்பித்து விருதுபெறும் கலாசாரம் உருவாகிவரும் இன்றைய காலச்சூழலில், தமிழர் தகவலின் விருது வழங்கும் முறைமையிலும் ஒரு தனித்துவம். தமிழ்ச் சமூகம் பெருமைப்படும் கணிசமான பங்களிப்புகளை நல்கிவந்த, அதே வேளை இதுவரை கவனிக்கப் - படாதிருந்த சிறந்த ஆளுமைகளைத் தேடிக் கண்டெடுத்துப் போற்றிப் பெருமைப்படுத்தும் மாண்புதான் அது.

அந்த வகையில், கடந்த தமிழர் தகவலின் ஆண்டு விழாவிலே, ஒலி ஊடகத்துறையில் ஒரு சுயம்புவாகத் தன்னை வளர்த்து, தாயகத்தில் வாழ்ந்திருந்த காலத்திலும், புலம்பெயர்ந்து பிரான்ஸ், லண்டன் என வாழும் காலத்திலும் ஒலி, ஒளி ஊடகத்துறைகள் மூலம் தமிழ்ச் சமூகத்திற்கும் நம் தமிழ்க் கலைஞர்களுக்கும் அளப்பரிய தொண்டுகளாற்றி வரும் சகோதரர் எஸ்.கே.ராஜென் அவர்களை கனடாவுக்கு வரவழைத்து விருது வழங்கிச் சிறப்பித்தது, ஓர் ஊடக - வியலாளன் என்ற வகையில் எனக்குப் பெருமகிழ்வினைத் தந்தது.

இம்முறை வழங்கப்பட்ட விருதுகளைப் பெற்றவர்களில் எனது நேசத்துக்குரியவர்கள் நால்வர் இடம்பெற்றிருந்தமையும் மகிழ்வினைத் தந்தது. அமெரிக்க மண்ணில் மருத்துவத்துறையில் உச்சநிலையிலுள்ள பேராசிரியர் இந்திரன் பி. இந்திரகிருஷ்ணன், கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தாயகத்திலும் கனடிய மண்ணிலும் அற்புதமான இசைக்கோலங்களை உருவாக்கிய படைப்பாற்றல் திறன் கொண்ட கலைஞர் ஃபயாஸ் ஸவாஹிர், மூன்று தசாப்தமாக தமிழர்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்து வரும் இனிய நண்பர் செந்தி செல்லையா, உழைப்பால் உயர்ந்த தொழில் முனைவர் திரு.ரவி கனகசபை ஆகியோரோடு சிறீமதி ரஜனி மதிவர்ணன், திரு. சண்முகராஜா சின்னத்தம்பி, செல்வி. சிந்து செந்தில்மோகன், திரு. சிவசுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை ஆகியோர் விருதுகளால் மாண்பேற்றம் பெற்றார்கள். ஒவ்வொரு விருதும் வழங்கப்படும் முன்னர் அவ்விருதுக்குரியவரது சிறப்புகள், அவர் ஆற்றிய பங்களிப்புகள் பற்றிய அறிமுக உரை வாசிக்கப்பட்ட விதம், அந்த விருது வழங்கப்படுவதை நியாயப்படுத்தும் சிறந்த நடைமுறை என்றே கூறலாம்.

மக்கள் பணியில் தன்னை இணைத்தவாறு சமூக வாழ்வில் பயணிக்கும் திரு. நீதன் சண் தலைமையில் விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. விழா, குறித்த நேரம் ஆரம்பித்தது முதல், ஒவ்வொரு நிகழ்வும் அமைந்த நேர்த்தி, அன்றைய இலங்கை வானொலிக் காலத்தை நினைவூட்டியது. 60களின் ஆரம்பத்தில் வானொலி நிலையத்தில் நான் அடியெடுத்து வைத்த 'சிறுவர் மலர்' நிகழ்ச்சிகூட, நேரடி ஒலிபரப்பாக நடைபெற்ற காலம் முதல் பல்வேறு தொழில்நுட்ப மாற்றங்களைக் கண்டபின் 98ல் விடைபெறும் காலம் வரை அங்கு கடைப்பிடிக்கப்பட்ட காலம் தவறாத 'நேர ஒழுங்கு விதிகள்' இந்த விழாவின்போது நினைவுக்கு வந்தன.


சிலவேளை திரு. திருச்செல்வம் சில வருடங்கள் அங்கு எம்முடன் கடமையாற்றியதால் விளைந்த நல் ஒழுக்கமாகவும் இருக்கலாம். குறிப்பாக அவர் எமது செய்திப் பிரிவில் பணியாற்றியதால், வானொலியில் செய்தி வாசிப்புத் தொடர்பான ஒரு நினைவை மட்டும் இங்கு இரை மீட்டுகிறேன். அப்போதெல்லாம் செய்திகளுக்கு ஒதுக்கப்படும் நேரம் பத்து நிமிடங்கள் மட்டுமே. சில வினாடிகள் தாண்டினாலோ வாசிப்பவருக்குத்தான் தண்டனை. எனவே ஒவ்வொரு செய்தி வாசிப்பாளரும் பத்து நிமிடத்துக்குள் தன்னால் வாசித்து முடிக்கக் கூடிய வரிகளின் எண்ணிக்கையை முன்கூட்டியே ஒத்திகை பார்த்து நிறைவு செய்ய வேண்டும்.

இந்த நடைமுறை மீறப்பட்டால் முதன்முறையெனில் எச்சரிக்கையுடன் கூடிய மன்னிப்பு. தண்டம் என்றால் ஒருவார ஊதியத்தை இழக்கவேண்டி வரும். இந்தளவு கட்டுப்பாடுகளா என்று இன்று இத்துறையில் இருப்பவர்கள் நம்பவும் மறுக்கலாம்.

அந்த அளவு நேரக் கட்டுப்பாடுடன் இந்த விழாவும் நடைபெற்றது என்பதற்காகவே அன்றைய நினைவை இங்கு இரை மீட்டினேன். இத்தனைக்கும் திரு. திருச்செல்லம் அவர்கள் பதற்றமின்றி இருந்த இடத்திலேயே அமைதியாக இருந்தார். ஆனால், அவரது கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டுக் காரியங்கள் நடைபெறுவதை அவதானித்தேன்.

முன்கூட்டியே துல்லியமாகத் திட்டமிட்டு அதனைச் செயல் வடிவமாக்க இளையவர் படையணியை உருவாக்கியிருந்தமையால்,

(31ம் பக்கம் வருக)



ப. ஸ்ரீஸ்கந்தன்

# ஞாபகம் துளிர்க்கிறதே ! 18

## நல்லூர் திருவிழா

நல்லூர் எங்களுக்கு கடந்து போகிற தூரத்தில் இருந்தது. இப்போ ஓட்டோவில் போக வேண்டியுள்ளது. நடக்க முடியவில்லை. நான் மட்டுமல்ல, இங்குள்ள எல்லோரும் வாகனங்களில்தான் செல்கிறார்கள். எனினும், நடந்து செல்பவர்களுக்காக போடப்படும் தண்ணீர்ப் பந்தல்கள் இன்றும் இருக்கின்றன. தினமும் திருவிழா முடியும் நேரத்தில் முதலாம் பந்தலில் வழங்கப்படும் கோப்பி பிரசித்தம்.

எனது குலதெய்வம் சித்திவிநாயகராக இருந்தபோதும், நான் வழிபடும் தெய்வமாக நல்லூரான் இருக்கிறார். வேல் வழிபாடு எனக்குப் பிடித்தமானது. பேசவும் ஏசவும் நட்போடு பழகவும் வல்லவனாக வேல் என் நெஞ்சில் குடியிருக்கிறது.

நல்லூர் கந்தனின் கொடி ஏறினால் எங்களுக்கும் திருவிழா ஆரம்பமாகிவிடும். நாங்கள் ஒருநாளும் கச்சான் வாங்கிச் சாப்பிட்டதில்லை. ருசி பார்க்கிறமாம் என்று எல்லா கச்சான் ஆச்சிகளிடமும் பேச்சு வாங்கி இலவசமாகச் சாப்பிடுவோம். அப்போது பத்மநாதனின் நாதஸ்வரம் நித்தியமாக இருந்தது. நாங்களும் பின் வீதியில் வாங்கிய புல்லாங்குழலை ஊதியபடி வீட்டுக்கு வருவோம். சிலவேளை பூவரசம் இலையை சுருட்டியும் வாசித்ததுண்டு.



பகலில் தண்ணீர்ப் பந்தல்களை நோக்கி அலைந்து கொண்டிருப்போம். தொலைபேசி இல்லாத அந்நாட்களிலும் எந்தப் பந்தலில், என்ன ஊற்றுகிறார்கள் என்பது அத்துப்படியாக தெரிந்திருந்தது. முன்பெல்லாம் நல்லூர் தேர்த் திருவிழாவின்போது மட்டுமே அங்கவீனர்களைக் காணலாம். இப்போது அப்படியல்ல. கையில்லாதவர்களை, மரக்கால் அணிந்தவர்களை, உடலைத் தேய்த்து வீதியைக் கடப்பவர்களை போகும் இடமெல்லாம் காணலாம். யுத்தம் தந்த வலிகள்.

வேல் முருகன் வள்ளி - தெய்வானை சமேதராக பிரதான வாசலால் வெளிவரும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும். பேரிகைகள் முழங்க, நாதஸ்வரம் உச்சஸ்தாயியில் ஒலிக்க முருகன் வருவதைப் பார்க்க கொடுத்து வைக்க வேண்டும்.

இரு வருடத் தவிப்புக்கு பின்னர் இம்முறை நல்லூர்த் திருவிழாக்கள் சிலவற்றைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பக்தர்களின் வருகை வழமைபோல் இருக்கவில்லை. சிலர் முகக்கவசம் அணிந்திருந்தார்கள். ஆலயத் தொண்டர் படையினர் மிகவும் கண்டிப்பாக இருந்தனர். ஆண்டவனின் அருகே சேர்ட்டுடன் சென்ற ஆண்களின் சேர்ட்டைக் கழற்றச் சொன்னார்கள். வீடியோ எடுப்பவர்களுக்கு பேச்சு நடந்தது, அவர்களது பேச்சுமுறை சரியாக இருக்கவில்லை.

இம்முறை ஒருமுகத் திருவிழா மிகவும் வித்தியாசமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. சுவாமி வாசல் வழியே வரும்போது பெரிய வேல் ஒன்றைக் கையில் பிடித்தபடி குருக்கள் ஒருவர் பீடமொன்றின் மீது ஏறி நின்று "எங்கள் தெய்வம் கந்தக் கடவுள்... காக்கும் கடவுள்... யாழ்ப்பாணம் நல்லையம்பதியில் எழுந்தருளியிருக்கும் தெய்வம்... அழகுக் குமரன்... எங்கள் தமிழ்க் கடவுள் கந்தப் பெருமான் வாசற்படி தாண்டி வருகிறார்...வருகிறார்... வருகிறார்" என்று கட்டியம் கூறிய காட்சி புல்லரிக்க வைத்தது.

அதனைத் தொடர்ந்து குதிரை வாகனத்தில் அமர்ந்த முருகன் முன்னால் சிலம்பம் குழுவினர் சிலம்பாட்டமும், இசைக்கலைஞர் நவரூபன் குழுவினர் கிளாரினெற் இசையும் வழங்க, இடைக்கிடை குதிரைகளின் கனைப்பு ஒலியும் கேட்க முருகன் வந்த தோற்றம் புதிய மாப்பாணரின் மாற்றத்துக்கான தேடலின் முதற்படியாக அமைந்திருந்தது.

தொலைபேசியில் நேர்முக வர்ணனை செய்பவர்கள், நேரடியாக சுவாமியை உறவினர்களுக்கு வீடியோவில் காட்டுபவர்கள் என்று கை உயர்த்தி சுவாமி கும்பிட்டவர்களைவிட, தொலைபேசிகளை தூக்கிப் பிடித்தவர்கள் அநேகர். முருகனை வேறு மறைத்துக் கொண்டிருந்தார்கள். அரோகரா சத்தத்துக்குப் பதிலாக, "எங்கு நிற்கிறாய்" என்று தொலைபேசியில் உறவினர்களை, நண்பர்களைத் தேடும் சத்தம் அதிகமாக இருந்தது.

தீர்த்தத் திருவிழா அன்று கேணியில் என்ன நடைபெறுகிறது என்பதே தெரியாத அளவுக்குச் சனம். எனினும் எனக்குப் பக்கத்தில் நின்ற சில இளம் பெண்கள் தொலபேசியில் நேரடி ஒளிபரப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தீர்த்தத்திலன்று தமிழர் தகவல் குழுவைச் சேர்ந்த ராஜ்குமார் அவர்களை கோவில் தெற்கு வீதியில் சந்தித்தேன். பிரதிட்டை செய்யும் பக்தர்களின் வழியின் குறுக்கே நின்றவர்களை விலத்தி நிற்குமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

தேர் உலாவே நல்லூர் திருவிழாவின் உச்சம். மக்கள் வெள்ளத்தினூடாக தேர் குலுங்கிக் குலுங்கி அசைந்து வரும் காட்சி அற்புதம். நிறையப் பேர் பிரதிட்டை செய்தார்கள். காவடி எடுத்தார்கள். இருபதுக்கும் மேற்பட்ட தூக்குக் காவடிகள் வந்தன. எனினும் அவர்களை வீதியின் உள்ளே அனுமதிக்கவில்லை.

பஜனைக் குழுக்கள் வழக்கம்போலவே. எமது நாட்களில் வயது முதிர்ந்த, மொட்டை அடித்த ஒருவர் கையில் தாளக்கட்டையுடன் ஆடி ஆடி வரும் காட்சி நினைவில் வந்து போனது. வேலன் சுவாமிகளின் தலைமையில் சின்மயா மிஷன் மாணவர்களது பஜனையும் வரிசை ஒழுங்கும் அழகாக இருந்தது.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்து விடுதிகள் தங்கள் கட்டணத்தை உச்சத்தில் வைத்திருந்தன. வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் இடம் தேடி அலைந்து கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. இவர்களுள் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பதுதான் வரலாற்றுச் சோகம்.

# ஆசைக்கிழத்தியும் இல்லக்கிழத்தியும்

முனைவர் பால.சிவகடாட்சம்



முனைவர் பால. சிவகடாட்சம்

## படித்ததும் கேட்டதும்

54

## Concubine and Wife

உற்றாரும் பெற்றோரும் கூடியிருக்கும் வேளையில் ஊரறிய மாலையிட்டு மணம் முடித்த மனைவி சொந்த வீட்டில் நலமோடு இருக்கையில் வேறொரு வீட்டில் பிறிதொரு பெண்ணைக் காதற்கிழத்தியாக வைத்திருக்கும் ஆண்கள் எக்காலத்திலும் உண்டு. சங்ககாலத்தில் மருதநிலத்தில் வாழ்ந்த ஆண்கள் மத்தியில் இலக்கியத்தில் இடம்பெறும் அளவுக்கு இந்த வழக்கம் பரவியிருந்தது. உயிர் வாழ்வதற்கு நாள் முழுதும் உடல் உழைப்பை நம்பியிருந்த நெய்தல், குறிஞ்சி மற்றும் பாலைநிலத்து ஆண்களுக்கு ஆசைக்கிழத்தி வைத்திருக்கும் அளவுக்கு நேரமோ வசதியோ கிடைப்பதில்லை. பரத்தமை ஓரளவு அங்கீகரிக்கப்பட்டிருந்த காலம் அது. எனினும் மனைவி என்னும் அங்கீகாரம் இல்லாது ஒருவனின் துணை -வியாக மட்டும் அறியப்பட்ட அப்பாவிப் பெண்களின் பரிதாப நிலை குறித்துச் சங்கச் சான்றோருள் ஒருசிலர் சஞ்சலம் அடைந்தார்கள். அத்தகைய பெண்களின் மனக்குமுறல் -களை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடியும் வைத்தார்கள்.

சிலப்பதிகாரத்து மாதவிக்கு ஒரு குழந்தையைப் பெற்று வளர்க்கும் பேறு கிடைத்தது. எனினும் சங்க காலத்துக் காதற்கிழத்திகளுக்கு இந்த உரிமை இருந்ததால் இவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு சமுதாயத்தில் அங்கீகாரம் கிடைத்ததா என்பது பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. ஊரார் அறிய மாலையிட்ட மங்கைக்கு இல்லக்கிழத்தி என்னும் பதவி கிடைத்தது. அவள் தன் கணவனுக்கு ஒரு வாரிசைப் பெற்றுக் கொடுத்தபின் அவளது மதிப்பும் அதிகாரமும் பலமடங்கு அதிகரித்துவிடும். அவளது கணவன் வீட்டில் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடுவான். தனது அதிகாரத்தைத் தனது ஆசைக்கிழத்தியின் வீட்டில் -தான் அவன் காட்டமுடியும். இந்த விடயம் பற்றி அவனது அங்கீகாரமற்ற காதலி நன்றாகவே அறிந்திருந்தாள். எனினும் ஆண்களின் போலித்தன்மை குறித்து தனக்குள்ளே குமுறிக்கொள்வதைத் தவிர அவளால் வேறு என்ன செய்ய முடியும்.

“மருதநிலத்து மாமரத்தில் இருந்து பழுத்து விழும் இனிய பழத்தை சேற்று வயலில் உள்ள ஆற்றுவாளை மீன் பாய்ந்து கவ்வும் வளம் மிகுந்த ஊரவன் அவன். என் வீட்டில் இருக்கும் போது பெருமையாகப் பேசிக்கொள்வான். ஆனால் தன் வீட்டில் இருக்கும்போது பொம்மலாட்டக்காரன் தூக்கும்போது கையையும் காலையும் தூக்கும் ஆடிப்பாவை போல அவனுடைய மகனைப் பெற்றவளின் விருப்பத்துக் கேற்றபடி ஆடுவான்” என்று மனம் குமுறுகிறாள் அந்தப் பேதைப் பெண். ஆலங்குடி வங்கனார் இயற்றிய இப்பாடல் சங்க இலக்கியமான குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

கழனி மா அத்து விளைந்து உகு தீம் பழம்
பழன வாளை கதூ உம் ஊரன்
எம் இல் பெரு மொழி கூறித் தம்மில்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே
(குறுந்தொகை 8)





There have always been men who keep another woman in a separate house while the woman he married is well at home. During the Sangam period, this custom was so prevalent among the men living in the agricultural land that it is mentioned many times in contemporary literature. Neither the fisher folks nor the dwellers and hunters of mountainous and dryland regions where hard physical work is required throughout the day for survival, men could hardly afford the time and wealth to spend on concubines.

It was a time when adultery was somewhat tolerated in the male dominated society. However, some of the poets from the Sangam era expressed concern about the plight of innocent women who were known as either concubines or prostitutes. These poets also sang songs expressing the frustrations of such women.

Madhavi, the concubine of Kovalan of Silapathikaram, was blessed with a child whom she was able to bring up. However, there is no information about whether a concubine of a married man in the Sangam era had this right or whether the children born to them were recognized by the society.

The lady officially married to her man got the title of housewife. After she gives her husband an heir, her prestige and power will increase manifold. Her husband will tend to lie low in their house. He can show his power only in the house of his clandestine partner.

Though his illicit girlfriend was well aware of this what else can she do but brood over the hypocrisy of men.

"He is from the town where the boal catfish in the flooded paddy field grab the sweet fruit that falls from the mango tree standing in the field. He used to brag when he is in my house. But in his house, he goes along with the wishes of the woman who gave birth to his son, like a puppet that raises its arms and legs when the puppeteer moves,”

laments the desperate woman.

This song written by Alangkudi Vangkanaar is from the Sangam classic Kurunthokai (8).

குறிப்பு: சங்ககாலத்து வாளைமீனும் தற்போது வாளைமீன் என்றழைக்கப்பெறும் மீனும் ஒன்றல்ல. சங்ககாலத்தில் வாளைமீன் என்று அறியப்பட்டது நன்னீரில் வாழக்கூடிய ஒருவகைக் கெளுத்திமீன் ஆகும். நன்னீர் வாளைமீன் (Boal catfish), கடல் வாளை மீன் (scabbard fish)




# பார்வையாளரை பரவசத்தில் ஆழ்த்திய பதினாறு வயது ஷரோன் டக்ளஸின் பரதநாட்டிய அரங்கேற்றம்!











பதினாறு வயதான பல்கலைச் செல்வி ஷரோன் நேரியா டக்ளஸின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த மாதம் 3ம் திகதி ரொறன்ரோ பெரும்பாக வோன் நகரில் அமைந்துள்ள சிற்றி பிளேஸ் தியேட்டரில் இடம்பெற்றது. மண்டபம் நிரம்பியிருந்த அவையோர் மத்தியில் குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகி நிறைவுபெற்றது சிறப்பம்சம். மார்க்கம் St. Brother Andre Catholic High Schooly உயர்பாடத்திட்ட வகுப்பில் கல்வி பயிலும் ஷரோனின் சலங்கை பூஜை அவரது ஒன்பதாவது வயதில் இடம்பெற்றது. பரதத்தில் மட்டுமன்றி வாய்ப்பாட்டு, பியானோ மற்றும் கிளாரினட் வாத்தியங்கள் இசைப்பது, நீச்சல், பனிச்சறுக்கல், பாடசாலை கரப்பந்தாட்டம், பட்மின்டன் குழுக்கள் ஆகிய விளையாட்டுக்களிலும் இவர் தீவிர ஈடுபாடு காட்டி வருபவர். அத்துடன் பொழுதுபோக்காக ஓவியம், வர்ணம் பூசுதல், சிகை அலங்காரம், ஒப்பனைக் கலை, சமையல் போன்ற பலவகைத் துறைகளிலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கி வரும் இவர், கலைக்கோவில் சிறீமதி வனிதா குகேந்திரனிடம் முறைப்படி பரதம் பயின்று அரங்கேற்றம் கண்டுள்ளார். புஷ்பாஞ்சலியிலிருந்து தில்லானா வரையான ஒவ்வொரு நடனத்திலும் கலைத்திறனை வெளிப்படுத்திய இவரது வர்ணம், அரங்கேற்றத்தில் முத்திரை பதித்ததாக அமைந்தது. ‘அன்னையை மறவேனடி’ என்ற பாடல் பெற்றோரைக் கனம் பண்ணும் வாழ்வியல் சிறப்பை பக்குவமாக எடுத்துக் காட்டியது. புகலிட வாழ்வில் பெற்றோர்- பிள்ளைகளிடையே அந்நியோன்யம் அகன்று செல்லும் இந்நாட்களில் அதனை மாற்ற வேண்டிய அவசியத்தை நிகழ்ச்சிகளை தமிழில் அறிமுகம் செய்த ரமணன் சந்திரசேகரமூர்த்தி அற்புதமாக விளக்கிக் கூறியது வர்ணத்துக்கு மேலும் எழுச்சியைக் கூட்டியது. ஆங்கில அறிவிப்புகளை செல்வி ஆரணி சுகந்தன் வழங்கினார். பிரதம விருந்தினராக திருமதி. சந்தியா சிறீவத்சனும், விசேட விருந்தினர்களாக பேராசிரியர் வண.பிதா ஏ. ஜே. சந்திரகாந்தனும், இசைக்கலைமணி பராசக்தி விநாயகதேவராஜாவும் கலந்து வாழ்த்துடன் கூடிய சிற்றுரைகளை வழங்கினர். கனடாவின் முன்னணி தொழிலதிபராக விளங்கும் டக்ளஸ் ராஜகாரியர் -மருத்துவர் கலிஸ்ரா ராஜகாரியர் தம்பதியரின் ஏகபுதல்வி ஷரோன் நேரியா டக்ளஸ் அவர்கள்.







(ஒளிப்படங்கள்: ‘தமிழ் மிறர்’ சார்ள்ஸ் தேவசகாயம்)

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?


## அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

**MATRIX LEGAL SERVICES**
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**

Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist



WE ARE HERE TO
**HELP YOU**

இலவச ஆலோசனைகளுக்கு:

**தீபன்**

24 Hours Direct Line

**(416) 831-4444**
**(416) 505-9804**

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

# Markham McNicoll Urgent Care Centre
## (MMUCC)

### எங்கள் புதிய மருத்துவ சேவைகள்!

நோயாளர்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்திலிருந்தோ நேரலை வழியாக (Virtual Care) மருத்துவரிடம் சிகிச்சை பெறலாம்.

நோயாளர்கள் கணினி மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ (online booking & book by phone) மருத்துவர் பார்வையிடும் நேரத்தையும் காலத்தையும் பதிவு செய்யலாம்.

வைத்திய கலாநிதி சிந்துலா விஜயா (குடும்ப மருத்துவர்) அவர்களது பதிவு பெற்ற நோயாளர்களும் இந்த சேவைகளைப் பெறமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு

**medcentrehealth.com**

எனும் எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

**2901 Markham Road, Unit -11**
**Toronto, ON M1X 0B6**

**Phone: 416-609-3333**

**Transition**

CRITICAL ILLNESS INSURANCE



## அபாயம் உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.

### புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast cancer | 1 woman in 8 |
| Prostate cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival rate | |
|---|---|
| Cancer[2] | 60% |
| Heart attack | 85% |
| Stroke | 80% |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

**BENEFITS PAID BY GENDER**

Women 54%
Men 46%

**Industry critical illness claim breakdown[3]**




iA Financial Group



**AJITH SABARATNAM**
**647-401-5800 / 416-439-2800**
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.




### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• *Vistation* • *Funeral & Memorial Service*
• *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death


**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
Tel: 647-702-2159
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்
தங்கமகள் சேமிப்பு திட்டத்தில்
இணையும் அனைவருக்கும் $1500
பெறுமதியன நகையை பெற்றுக்கொள்ளமுடியும்
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7
Telephone: 647-702-2159 / 647-947-2864
NewRanganasJewellery
newranganasjewelhouse.com


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S CHOICE
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
Sabesan's Choice
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com


AGA
Beauty Skin SPA & Tranning Center
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
15, Karachi Drive, Unit 5, Markham On L3S0B5
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7, Scarbarough, On M1K2S2


Just Sold!
RAVE
Another SOLD $ 206,000 Over Asking Price
18 Brackenridge St, Ajax, Ontario
Rossland & Salem
- Contact us for a Free Home Evaluation! (no obligation)
- For personalized Tour & Other Property Information Call Us today!
- Free home staging
Before you list Call me You can see the Difference
Highest price in the same street
P.Raveenthiran
Real Estate Broker
416-567-2462
realtor.rave@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977 | Fax: 905.201.9229
HOMELIFE
HIGHER STANDARDS


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


Veerar Takeout & Catering
416-299-4541
647-293-6634
5790 Sheppard Ave East, #3, Scarborough, ON M1B 5J6


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream

# தற்கொலைகளை சொற்களால் தடுத்துவிட முடியுமா?

***இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி கனடாவிலும் கடந்த சில வருடங்களாக தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. பெண்களிலும் பார்க்க ஆண்களே கனடாவில் கூடுதலாக தற்கொலை செய்வதாக அரச புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. இவ்வாறான சூழலை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் மனநல மருத்துவரும் எழுத்தாளருமான சிவபாலன் இளங்கோவன் அந்நாட்டு ஊடகமொன்றில் பதிவு செய்த கட்டுரை ஒன்றின் சில முக்கிய பகுதிகள் இங்கு மீள்பதிவு செய்யப்படுகிறது.***

வளர்ந்துவரும் நாடுகளில் அதிகரித்துவரும் தற்கொலைகளைக் கருத்தில்கொண்டு, உலக சுகாதார நிறுவனம் தற்கொலைகளைத் தடுப்பதற்காக ஒருங்கிணைந்த வழிமுறைகளையும் திட்டங்களையும் நாடுகள் உருவாக்கிட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி - வருகிறது.

ஆனால், இன்று வரை அப்படி எந்தத் திட்டங்களும் இல்லை. தற்கொலைகளைத் தடுப்பதில் தேசிய அளவில் பெரிய முன்னெடுப் - புகள் இல்லை. தற்கொலை தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் எந்த வழிகாட்டுதல்களையும் பின்பற்றாமல் இருப்பது, அதிகரிக்கும் தற்கொலைகள் தொடர்பாக அறிவியல்பூர்வமான ஆராய்ச்சிகள் எதுவும் பெரியளவில் இல்லாமல் இருப்பது, அதைத் தடுப்பதற்கு உண்டான ஒருங்கிணைந்த அறிவியல்பூர்வமான வழிமுறைகளை உருவாக்குவதில் மெத்தனமாக இருப்பது போன்றவை தற்கொலைகள் தொடர்ந்து அதிகரித்துவருவதற்கான முக்கியக் காரணங்கள்.

**எந்தச் சூழ்நிலை தள்ளுகிறது?:**

சக மனிதர்களின் மீதும், தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் மீதும் முற்றிலும் நம்பிக்கையிழந்த தருணத்திலேயே ஒருவர் தற்கொலை முடிவை எடுக்கிறார். பெரும்பாலான நேரம் தற்கொலை எண்ணங்கள் தோன்றிய உடனே யாரும் தற்கொலை முயற்சியில் இறங்குவதில்லை. அப்படி எண்ணங்கள் எழும்போது வாழ்வதற்கான காரணங்களைப் பற்றியும், சக மனிதர்களின் மீது இருக்கக்கூடிய பொறுப்புகளை நினைத்துக்கொண்டும் தற்கொலை எண்ணத்தை நிராகரித்துவிடுகிறார். ஆனால், சக மனிதர்களும் சமூகமும் நம்பிக்கையளிக்கத் தவறும்போது, தற்கொலை எண்ணத்திற்குச் செவிசாய்க்கும் கட்டாயத்திற்கு ஒருவர் ஆளாக நேரிடுகிறது.

**தற்கொலை என்பது கோழைத்தனமா?:**

நிச்சயமாக இல்லை. அது ஒரு உதவிக்கான அழைப்பு. தற்கொலை செய்துகொண்ட பெரும்பாலானவர்கள் அதற்கு முன்பு ஏதேனும் ஒரு முறையாவது தற்கொலைக்கான முயற்சியை மேற்கொண்டிருப்பார்கள் என ஆராய்ச்சிகள் சொல்கின்றன. ஒரு பெரும் நெருக்கடியில் வெளியேறும் வழிதெரியாமல் ஒருவர் தவிக்கும்போது அதற்கான உதவியை நாடியோ அல்லது நிபந்தனையற்ற ஒரு அரவணைப்பை நாடியோ பல முறை சக மனிதர்களிடமும், சமூகத்திடமும் அவர் வெவ்வேறு வகைகளில் உணர்த்துகிறார் அந்தக் கோரிக்கை முற்றிலும் நிராகரிக்கப்படும்போது, அதிலிருந்து விடுபட எந்த வழியும் தெரியாத ஒரு இருண்ட தருணத்திலேயே, தற்கொலை செய்துகொள்வது என்ற விபரீத முடிவை ஒருவர் எடுக்கிறார்.

**ஆரம்பத்திலேயே கண்டறிய முடியுமா?:**

நிச்சயமாக முடியும். தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவர் அந்த எண்ணத்தைத் தன்னுடைய நடவடிக்கைகள் மூலமாகப் பல வகைக- ளில் சுற்றியுள்ளவர்களிடம் உணர்த்திக்கொண்டே வருவார். நாம்தான் அதைக் கவனிக்கத் தவறிவிடுவோம் அல்லது அலட்சியப்படுத்தி - விடுவோம்.

முன்பே தெரிந்தும் பெரும்பாலான நேரம் நாம் அலட்சியப்படுத்தி - விடுகிறோம். அப்படித் தெரிந்தவுடன் அவரை அழைத்துப் பேசியிருந்தாலோ அல்லது அவர் சொல்வதைக் கேட்டிருந்தாலோ நிச்சயம் அந்தத் தற்கொலையை நம்மால் தடுத்திருக்க முடியும்.

**மனநோயின் வெளிப்பாடா?:**

தற்கொலை செய்து கொள்பவர்களில் மூன்றில் ஒருவருக்கு சிகிச்சை - யளிக்க வேண்டிய மனநலப் பிரச்சினைகள் ஏதேனும் இருக்கின்றன என்கின்றன ஆராய்ச்சிகள். அதனால்தான் தற்கொலைக்கு முயல்பவர் - களை உடனடியாக மனநலப் பரிசோதனைக்கு உட்படுத்துகிறோம். மனநலப் பிரச்சினைகளை ஆரம்பக்கட்டத்திலேயே கண்டறிந்து சிகிச்சையளிக்கும்போது, மூன்றில் ஒரு தற்கொலையைத் தடுக்க முடியும். ஆனால், தற்கொலை செய்துகொள்ளும் எல்லோருக்கும் மனநலப் பிரச்சினைகள் இருப்பதில்லை. சமூகவியல், உளவியல், உயிரியல் சார்ந்த பல காரணங்களும் இருக்கின்றன. காரணத்தைக் கண்டறிந்து சரிசெய்வதன் வழியாகவே தற்கொலைகளை ஒட்டுமொத்தமாகத் தடுக்க முடியும்.

**பேச்சு தற்கொலையைத் தூண்டுமா?:**

நாம் பேசுவதாலேயே அவருக்குத் தற்கொலை எண்ணம் வந்து தற்கொலை செய்துகொள்வார் என்கிற அச்சம் காரணமாக, அவருக்குத் தற்கொலை எண்ணங்கள் இருக்கலாம் என்று நாம் நினைக்கும் ஒருவரிடம் அது பற்றிப் பேசத் தயங்குவோம். ஆனால் அது உண்மையல்ல, நாம் அவரிடம் அதைப் பற்றிப் பேசலாம், அவரிடம் திறந்த மனத்துடன் உரையாடலாம். தற்கொலை எண்ணங்களைக் கொண்ட ஒரு நபர் இப்படிப்பட்ட உரையாடல் வழியாகவே தனது மனதைத் திறக்கிறார். அது அவருக்குக் கொடுக்கும் ஆசுவாசத்தின் விளைவாக தற்கொலை எண்ணத்திலிருந்து அவர் முழுமையாக விடுபடுவதற்கே வாய்ப்புகள் இருக்கின்றன.

**எப்படி எதிர்கொள்வது?:**

சில சந்தர்ப்பங்களில் ‘வாழ்வதைவிட சாவதே மேல்’ என்ற எண்ணம் எல்லோருக்குமே வருவதற்கு சாத்தியமிருக்கிறது. உயிரை மாய்த்துக் - கொள்வதற்கு நாம் தனிப்பட்ட பிரயத்தனம் எதுவும் செய்யத் தேவையில்லை, எதுவுமே செய்யாமல் இருந்தாலே எல்லோரும் ஒருநாள் இறக்கத்தான் போகிறோம். ஒரு சில சந்தர்ப்பங்களில் ஏற்படும் தோல்விகளோ, ஏமாற்றங்களோ இந்த ஒட்டுமொத்த நோக்கத்தை எப்போதும் சிதைத்துவிடாது என்பதைக் கவனத்தில் கொள்வதன் - வழியாகத் தற்கொலை எண்ணத்திலிருந்து மீண்டுவர வேண்டும்.

**மனநல ஆலோசனை தடுக்குமா?:**

தற்கொலைகளைத் தடுப்பதில் மனநல ஆலோசனை மட்டுமே முழுமையான தீர்வு கிடையாது அதுவொரு உத்தி மட்டுமே. பெருகி - வரும் தற்கொலைகளுக்கான சமூகவியல், உளவியல் காரணங்களைப் புரிந்துகொண்டு, அதைத் தடுப்பதற்கான முயற்சிகளைச் சமூகம் முன்னெடுக்க வேண்டும். பொருளாதார நெருக்கடிகள், வேலைவாய்ப் - பின்மை, குறைந்த ஊதியம் போன்றவை தனிநபர்கள் மீதும் அவர்கள் வழியாகக் குடும்பத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. கடினமான கல்வித் திட்டங்கள், பாரபட்சமான தேர்வுமுறைகள், மதிப்பெண்களைப் பிரதானமாகக் கொண்ட கல்விக் கொள்கைகள் போன்றவை மாணவர்களின் மீது தாக்கம் ஏற்படுத்தக்கூடியவை.

இந்த அதீதச் சுமைகளால் திணறும் ஒருவரின் புறச்சூழலைச் சரிசெய்யாமல் எப்படி அகச்சூழலை மட்டும் சரிசெய்துவிட முடியும்? ஒரு சமூகமாகத் தனி நபரின் மனநலத்தை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்த பிறகு தனி நபரின் மனநலத்தை மேம்படுத்தும் ஆலோசனைகள் வழங்குவது பயனுள்ளதாக இருக்குமே தவிர, வெறும் மனநல ஆலோசனை மட்டுமே தற்கொலைகளைத் தடுப்பதில் முழு தீர்வு ஆகிவிடாது.

தொடர்புக்கு: sivabalanela@gmail.com

# இளவரசி டயானாவின் மரணத்தின் இருபத்தைந்தாவது ஆண்டில் எலிசபெத் அரசி 96 வயதில் மறைவு



எழுபது வருடம் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் அரசியாகவிருந்து தமது 96வது வயதில் கடந்த மாதம் 8ம் திகதி இயற்கையெய்திய எலிசபெத் அரசியின் இறுதிச் சடங்கு பூரண அரச மரியாதையுடன் 19ம் திகதி திங்கட்கிழமை லண்டனில் இடம்பெற்றது. இவரது மரணத்தையடுத்து மூத்த புதல்வரான சார்ள்ஸ் அரசராகப் பதவியேற்றுள்ளார். சார்ள்ஸின் முதல் மனைவியான இளவரசி டயானா பாரிசில் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்ட 25வது வருடத்தில் எலிசபெத் அரசி மரணமானதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டு வருகின்றனர்.

கனடா எலிசபெத் அரசியை தலைமையாகக் கொண்டு இயங்கும் நாடு என்ற வகையில், அவரது இறுதிச் சடங்கு நாளான 19ம் திகதியை தேசிய விடுமுறை தினமாக பிரகடனம் செய்தது. ஆனால், ஒன்ராறியோ மாகாணம் உட்பட பல மாகாணங்கள் இதனை விடுமுறை நாளாக அறிவிக்கவில்லை.

இறுதிச் சடங்கு நிகழ்வில் கனடாவின் உயர்மட்ட பிரமுகர்கள் குழு பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தலைமையில் பங்குபற்றியது. இக்குழுவில் முன்னாள் பிரதமர்கள் ஜோன் கிரட்சியன், போல் மார்ட்டின், கிங் காம்பெல், ஸ்ரீபன் ஹார்பர் மற்றும் கனடிய ஆளுநர் நாயகம் மேரி சிமோன், முன்னாள் ஆளுனர்கள் இருவர் உட்பட பூர்வீக குடிகளின் மூன்று தலைமைப் பிரதிநிதிகளும் இடம்பெற்றனர். பிரதமர் ரூடோவுடன் அவரின் மனைவியும், ஆளுனர் நாயகத்தின் கணவரும் இக்குழுவில் இடம்பெற்றனர்.

கனடிய ராணுவ, கடற்படை, ஆர்.சி.எம்.பி. ஆகியவற்றின் வீரர்கள் இறுதிச் சடங்கு மரியாதை அணிவகுப்பில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. கனடா தொடர்ந்து முடியாட்சியில் இருப்பதற்கு அவ்வப்போது எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அவரது மறைவையொட்டிய அனுதாபம் பொதுவெளியில் பெருமளவில் காணப்பட்டது.

எலிசபெத் அரசி கனடாவை தமது சொந்த நாடு போன்றே மதித்து கரிசனை காட்டி வந்தவர் என்று பிரதமர் ரூடோ தமது அஞ்சலிச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

எலிசபெத் அரசி தமது எழுபது ஆண்டு பதவிக்காலத்தில் 22 தடவைகள் கனடாவுக்கு விஜயம் செய்துள்ளார். மிகக் கூடிய காலம் பிரித்தானிய முடி சூடிய ஆட்சித் தலைவராக இருந்தவர் என்ற பெருமையும் இவருக்கே உண்டு. பிரித்தானியாவின் பதினைந்து பிரதமர்களின் நியமனத்தை அங்கீகரித்தவர் என்ற சாதனையையும் இவர் பெற்றுள்ளார்.

மரணிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் பிரித்தானிய புதிய பிரதமரான லிஸ் ட்ரஸ் அவர்களை வரவேற்று அவரது நியமனத்தை உறுதி செய்ததே இவர் இறுதியாக மேற்கொண்ட அதிகாரபூர்வ நிகழ்வு.

எலிசபெத் அரசி இலங்கைக்கு இரண்டு தடவைகள் பயணம் மேற்கொண்டவர். முதன்முறையாக 1954ம் ஆண்டு ஏப்ரலில் சென்றபோது கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் பெருவரவேற்பளிக்கப்பட்டது. இதில், யாழ்ப்பாணத்தின் பிரபல நடனக் கலைஞராக விளங்கிய 'கீதாஞ்சலி' வி.கே. நல்லையா அவர்களின் மாணவர்களது தமிழ் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பெற்ற ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா 1981 அக்டோபரில் இடம்பெற்றபோது எலிசபெத் அரசி பிரதம விருந்தினராக தமது கணவரோடு பங்குபற்றினார். இவரது இரண்டு இலங்கை விஜயங்களும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்திலேயே இடம்பெற்றன. 1954ல் சேர். ஜோன் கொத்தலாவல பிரதமராகவும், 1981ல் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாகவும் இருந்தனர்.

எலிசபெத் அரசியின் மரணத்தை அவரது எழுபது வருட தலைமைத்துவ ஆளுமைக்கு நன்றி பாராட்டும் கொண்டாட்டமாக உலக நாடுகளும் சர்வதேச தலைவர்களும் பார்த்துள்ளராயினும், டயானாவின் மரணத்தை பிரித்தானிய ஊடகங்கள் இவ்வேளையில் மறைபொருளுடன் சுட்டி எழுதி வருவதையும் அவதானிக்க முடிகிறது. முடிக்குரிய மன்னராக சார்ள்ஸ் பதவியேற்றுள்ள போதிலும், அவரையும் டயானாவின் மரணப் பின்னணி ஆவிபோல தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பது தெரிகிறது.

- அதிரன்

## கனடாவின் 9 தினசரிகள் திங்கட்கிழமைகளில் வெளிவராது

கனடாவின் பிரபலமான 9 தினசரிகள் இந்த மாதம் 17ம் திகதியிலிருந்து திங்கட்கிழமைகளில் வெளிவராது என அறிவிக்கப்பட்டுள்ளது. Montreal Sun, Ottawa Sun, Ottawa Citizen, Vancouver Sun, Calgary Sun, Calgary Herrald, Edmonton Sun, Edmonton Journal, The Province ஆகிய பத்திரிகைகளை விளம்பரங்களின் குறைவு, அச்சுத்தாள் தட்டுப்பாடு, விற்பனை மந்தம் ஆகிய காரணங்களால் திங்கட்கிழமை வெளியீட்டை நிறுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# மறதி நோய் எப்படி வெளிப்படும் ?

டாக்டர் வி.எஸ். நடராஜன்
(சென்னை)

ஒருவருக்கு ஞாபக மறதியிருந்தால் அதை மட்டும் வைத்துக் கொண்டு அவருக்கு டிமென்சியா நோய் உண்டு என்று கூறிவிட முடியாது. மறதியுடன் கீழே குறிப்பிட்டுள்ள மூன்று தொல்லை -களில் குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு தொல்லைகளிலாவது அவர் பாதிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

”இன்று எனது பேத்தி அவளுடைய முதல் சம்பளத்திலிருந்து ஒரு புதிய மூக்குக் கண்ணாடியை எனக்காக வாங்கிக் கொடுத்தாள். துரதிருஷ்ட - வசமாக அதை எங்கு வைத்தேன் என்று எனக்கு ஞாபகப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதை நான் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். மீண்டும் தேடினேன். இப்பொழுது நான் எதை தேடினேன் என்பதே மறந்து விட்டது.”

இந்தக் கடிதத்துடன் ஒரு இளம் பெண் தன் தாத்தாவை அழைத்துக் கொண்டு என் கிளினிக்கிற்கு வந்தார். இந்தக் கடிதத்தை நன்றாகப் படியுங்கள். “மீண்டும் தேடினேன்’ என்பதையே ஞாபக மறதியினால் எத்தனை முறை உபயோகித்து இருக்கிறார் பாருங்கள் அந்த முதியவர். மறதி நோய் எப்படி வெளிப்படும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

**மறதி : முதுமையின் விளைவா?**
**அல்லது நோயின் அறிகுறியா?**

சுமார் 60 வயதைக் கடந்தவர்களுக்கு சற்று ஞாபக மறதி ஏற்படுவது சாதாரண நிகழ்வு. மிகவும் பழக்கமானவர்களின் பெயர் மறந்து விடும். புதிதாக டெலிபோன் எண்ணை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சிரமமாக இருக்கும். பணத்தைப் பலமுறை எண்ணிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஞாபகமறதி சம்பந்தப் - பட்ட நிகழ்ச்சிகள் தினமும் நடைபெறும். இது முதுமையின் விளைவு. ஆனால், பல நோய்களினாலும் ஞாபக மறதி ஏற்படலாம். மறதி உள்ளவர்கள் எல்லாம் டிமென்சியாவினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. அதே சமயம் டிமென்சியா உள்ளவர்களுக்கு ஞாபக மறதி கட்டாயம் இருக்கும்.

முதுமையில் ஏற்படும் ஞாபக மறதிக்கும், டிமென்சியா நோயினால் ஏற்படும் ஞாபக மறதிக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?

ஆரம்ப நிலையில் இரண்டிற்கும் வித்தியாசம் கண்டறிவது மிகவும் கடினமே. இருந்தாலும் கீழ்கண்ட குறிப்புகளின் மூலம் ஓரளவிற்கு வித்தியாசம் கண்டு கொள்ள முடியும்.

முதுமையில் ஏற்படும் ஞாபக மறதி, மூளையிலுள்ள நரம்பு செல்கள் மெதுவாக செயல்படுவதால் ஏற்படுகிறது. தனக்கு ஞாபக மறதி உள்ளதாக கவலை அடைந்து அவரே மருத்துவரிடம் செல்வார்.

ஒரு பொருளை தவறாகச் சொன்னாலும், அதை எடுத்துக் கூறினால், அவர் அதைப் புரிந்து திருத்திக் கொள்வார். பேனாவை கத்தி என்பார். ஆனால் அது தவறு, இது எழுதுவதற்கு உபயோகப்படுத்தக்கூடிய பொருள் என்று சொன்னால், அவர் புரிந்து, “ஆம் அது பேனா தான். நான் தான் தவறாக கத்தி என்று சொல்லிவிட்டேன்” என்று தன்னைத் திருத்திக் கொள்வார். MMSE Test - மனநோயைக் கண்டறியும் பரிசோதனை. இதில் மாற்றம் ஏதும் இருக்காது.

MRI மற்றும் PET Brain scan - இதிலும் மாற்றம் ஏதும் இருக்காது.

ஒருவருக்கு ஞாபக மறதியிருந்தால் அதை மட்டும் வைத்துக் கொண்டு அவருக்கு டிமென்சியா நோய் உண்டு என்று கூறிவிட முடியாது. மறதியுடன் கீழே குறிப்பிட்டுள்ள மூன்று தொல்லைகளில் குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு தொல்லைகளி - லாவது அவர் பாதிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

1. சரியாக பேச இயலாமை அதாவது உச்சரிப்பு தெளிவாக இருக்காது. சரியான வார்த்தையை சரியான இடத்தில் உபயோகிக்க சிரமப்படுவார் (Aphasia). உதாரணம்: ஒருவர் மதுரைக்குப் போவதை தன் நண்பரிடம் சொல்லும் பொழுது மதுரை என்ற ஊர் பெயர் மறந்து விட்டதினால், தெற்கே மீனாட்சி அம்மன் கோயில் இருக்கும் ஊருக்குப் போக வேண்டும் என்பார்.

2. தனக்கு தெரிந்த தினமும் செய்யக்கூடிய வேலையாக இருந்தாலும் அதை செய்யத் தெரியாமல் தவிப்பது (Apraxia). உதாரணம்: தனது பிரஷ்சில் பற்பசையை எடுத்து வைத்துக் கொண்டு பிரஷ் பண்ணத் தெரியாமல் அப்படியே இருப்பார்.

3. தெரிந்த பொருள்களையோ அல்லது நபர்களின் பெயர்க - ளையோ நினைவில் கொண்டு வர முடியாமை உதாரணம்: பேனா, சாவி, கடிகாரம் மற்றும் உறவினர்களின் பெயர்களை சொல்ல முடியாத நிலை.

ஆகையால் ஒருவருக்கு டிமென்சியாவினால் பாதிப்பு இருந்தால் அவருக்கு மறதியோடு மேற்குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது இரண்டு தொல்லைகள் இருப்பது அவசியம்.

**டிமென்சியா**

மூளையிலுள்ள இரசாயன பொருட்கள் குறைவதாலும் திசுக்கள் அழிவதாலும் ஏற்படுதல்.

தனக்கு ஞாபக மறதி ஏதுமில்லை என்று அவராகவே மருத்து - வரிடம் செல்லமாட்டார். ஆகையால் அவரை குடும்பத்தினர்கள் தான் மருத்துவரிடம் அழைத்து வருவார்கள்.

பேனாவை கத்தி என்று உறுதிபடக் கூறுவார். எவ்வளவு எடுத்துக் கூறினாலும் தன்னைத் திருத்திக்கொள்ளத் தெரியாது.

MMSE Test - இப்பரிச்சோதனையில் மாற்றம் இருக்கும்.

MRI மற்றும் PET Brain scan: இப்பரிசோதனைகளில் மாற்றம் தெரியும்.

**டிமென்சியாவின் வகைகள்**

டிமென்சியா என்பது பலவித தொல்லையினால் வரும் ஒரு நோயின் அறிகுறியே. எதனால் டிமென்சியா வருகிறது என்று தெரிந்து கொண்டால் அதற்குண்டான சிகிச்சையளிக்கலாம். டிமென்சியாவில் பல வகைகள் உண்டு.

டிமென்சியா வருவதற்கான காரணத்தை கொண்டு அவைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**காரணமின்றி ஏற்படும் டிமென்சியா**

அல்ஸைமர் நோய் (Alzheimer's Disease) இன்னமும் இந்நோய்க்கான காரணம் கண்டறியப்படவில்லை. மரபுப் பண்பும்

(மறுபக்கம் வருக)

# மறதி நோய் எப்படி வெளிப்படும்?

( முற் பக்கத்திலிருந்து )

(Gene) சுற்றுப்புறச் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றமும் (Environment) ஒரு காரணமாக இருக்காலம். டிமென்சியா நோயாளிகளில் சுமார் 70 சதவிதம் பேர் அல்ஸைமர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்நோயிக்கான காரணம் தெரியப்படா - ததால் அதற்கு தக்க சிகிச்சையுமில்லை. அதை குணப்படுத்தவும் முடியாது.

**காரணங்களினால் ஏற்படும் டிமென்சியா**
ஒரு சில காரணங்களினால் டிமென்சியா ஏற்பட்டால் அக்கார - ணத்திற்குண்டான சிகிச்சையளித்தால் டிமென்சியா குணம் அடைய வாய்ப்புண்டு. சுமார் 30 சதவிதம் பேர் காரணங்களி - னால் வரும் டின்சியாவினால் பாதிக்கப்படுகிறார்கள்.
அவற்றின் விவரம் :

**மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் பாதிப்பு:**
மூளையில் இரத்த கசிவோ அல்லது இரத்த ஓட்டம் தடைபட் - டாலோ, பக்கவாதம் போன்ற தொல்லைகள் ஏற்படலாம். பக்கவாதம் ஏற்பட்டு சில மாதங்கள் கழித்து அவர்களுக்கு டிமென்சியா வர வாய்ப்புண்டு. இத்தொல்லை கீழ்கண்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு அதிகம் உண்டு. உதாரணம்: நீரிழிவு நோய், உயர்இரத்த அழுத்தம், உடற்பருமன், இரத்தத்தில் அதிக கொழுப்பு சத்து, புகை பிடித்தல்.

அல்ஸைமர் டிமென்சியாவும், மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் பாதிப்பினால் ஏற்படும் டிமென்சியாவும் சேர்ந்தே ஒருவருக்கு ஏற்படலாம் மேலை நாடுகளை விட ஆசியா கண்டத்தில் அல்ஸைமர் டிமென்சியா குறைவாக உள்ளது. மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைபடுவதால் ஏற்படும் டிமென்சியாவே இங்கு அதிகம் காணப்படுகிறது.

**மூளையில் கட்டி அல்லது இரத்தக்கட்டி:**
மூளையில் தோன்றும் சாதாரண, மற்றும் புற்றுநோய் கட்டிகளினாலும் முதியவர்கள் அடிக்கடி கீழே விழ வாய்ப்புண்டு. தலையில் லேசாக அடிப்பட்டாலும் மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு அது கட்டியாக உறைந்து விடும். அந்த நேரத்தில் அவர்களுக்கு எந்த வித தொல்லையும் இருக்காது. ஆனால் சில மாதங்கள் கழித்து தலைவலி, வாந்தி, மயக்கம் மற்றும் மறதி போன்ற தொல்லைகள் ஏற்படும். இதை மூளை ஸ்கேன் மூலம் எளிதில் கண்டுபிடித்து சிறு அறுவை சிகிச்சை மூலம் இரத்தக் கட்டியை அகற்றி விட்டால் பூர்ண குணம் கிடைக்கும்.

**அதிக மது அருந்துதல்:**
தொடர்ந்து அதிகமாக மது அருந்தினால் நோய் வர வாய்ப்பு அதிகம் உண்டு. மதுவை நிறுத்தி விட்டு, வைட்டமின் மாத்திரை- களை எடுத்தால் நினைவாற்றல் திரும்பும்.

தைராய்டு சுரப்பி குறைவாக சுரத்தல்: வயதான முக்கியமாக பெண்களுக்கு தைராய்டு சுரப்பி குறைவாக இத்தொல்லையினால் உடல் பருக்கும், தோலில் வறட்சி ஏற்படும், தலை முடி உதிரும், தொண்டை கரகரக்கும், மந்த நிலையோடு மறதியும் சேரும். இவர்களுக்கு இரத்த பரிசோதனை மூலம் இந்நோய் உறுதி செய்யப்பட்டு தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் டிமென்சியா குறைய வாய்ப்புண்டு.

**வைட்டமின் குறைவு:**
வைட்டமின் பி1 மற்றும்பி 12 இரத்தத்தில் குறைந்தால் டிமென் - சியா வைட்டமின்களோடு வைட்டமின் பி6 ம் (ஃபோலிக்அமிலம்) குறைந்தால் இரத்தத்தில் ஹோமோசிஸ்டின் அளவு அதிகரிக்கும். இவர்களுக்கும் டிமென்சியா வரவாய்ப்புண்டு.
இத்தொல்லை உள்ளவர்களுக்கு வைட்டமின் பி1 (தையமின்), பி6 (ஃபோலிக்ஆசிட்), பி12 (மெக்கோபாலாமின்) கலந்த மாத்திரையை தொடர்ந்து கொடுத்தால் டிமென்சியா வராமல் தடுக்கமுடியும். இதைப்போலவே உண்ணும் உணவில் நயாசின் என்னும் பி.காம்பிளக்ஸ் சத்துகுறைந்தாலும் டிமென்சியா வரலாம். இவ்வைட்டமின், கல்லீரல், சிறுநீரகம், மாட்டு இறைச்சி, மீன், நிலக்கடலை, கோதுமை, காபியில் அதிகமுள்ளது.

**உறுப்புகள் செயலிழத்தலின் விளைவு:**
கல் ஈரல் மற்றும் சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கும் டிமென்சியா வரலாம். தொடர்ந்து சிறுநீரக டையாலிசிஸ் செய்து கொள்வோருக்கும் இந்நோய் வர வாய்ப்புண்டு.

உதறுவாதம்: உதறுவாதம் உள்ளவர்களுக்கு பல வருடங்கள் கழிந்து டிமென்சியா (18 - 40 வீதம்) ஏற்படாலம். உதறு வாதத்தை விட இந்நோய்க்கு கொடுக்கும் மாத்திரைகளின் பக்கவிளைவினாலேயே கூட டிமென்சியா வரலாம் என்று கருதப்படுகிறது. தூக்க மாத்திரை - மனநோய்க்கு கொடுக்கும் மாத்திரைகளை அதிக நாள் சாப்பிடுவதினாலும், நாள்பட்ட மனச்சோர்வு உள்ளவர்க்கும் டிமென்சியா வரலாம்.



## சனநாயக நெறிகளை மதித்த...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதகுலத்திற்கான சிறந்த சேவையை திரு. கொர்பச்சேவ் செய்துள்ளார். ஆனால் அவர் தனது அனைத்து தரிசனங்களையும் செயல்படுத்த முடியவில்லை. அவரது சமூகம் இதற்கு இன்னும் முழுமையாகத் தயாராக இல்லை. அவர் முன்வைத்த எண்ணகருக்களை செயல்படுத்தும் திறனை சோவியத் யூனியன் நிரூபிக்கவில்லை.

ஆனால் கொர்பச்சேவ் உலக வரலாற்றில் மனிதகுலத் திற்கும் ரஸ்ய மக்களுக்கும் நன்மை பயக்கும் முக்கியமான சில மாற்றங்களைத் தொடங்கி வைத்த ஒரு மகான் என என்றும் நினைவு கூரப்படுவார்.

அவர் கட்டவிழ்த்துவிட்ட உணர்ச்சிகளை வளர்க்கும் அளவுக்கு அவர் தனது வலிமையை நிரூபிக்கவில்லை ஆயினும் அவர் தொடங்கிய சனநாயக மாற்றத்தின் மூலம்மனிதகுலத்திற்கு பெரிய சேவையை செய்துள்ளார்.

---

## விழா எடுத்துப் பார்!

(15ம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துமே தன்னியக்கமாக நேர்த்தியுடன் நடந்து முடிவதைக் காணக்கூடியதாக இருந்தது.


விருந்தோம்பலுடன் விடைபெற்றபோது அவரிடம் சொல்ல நினைத்துச் சொல்லாமல் போன ஒரு வேண்டுகோளை இங்கு பதிவிடு - கிறேன்.

மனித நாகரிகம்போல, நம் தமிழர் மத்தியில் ‘விழா நாகரிகமும்’ வளர்ச்சியடைய வேண்டும். தமிழகத்தின் பிரபல சிறுகதை எழுத்தாளர் திரு.என்.சி. மோகன்தாஸ் அவர்கள் குவைத் நாட்டில் நீண்டகாலம் வாழ்ந்தபோது, ஏராளமான கலை நிகழ்வுகள், விழாக்களை நடத்திய அனுபவத்தையெல்லாம் திரட்டி ‘விழா எடுத்துப்பார்’ என்ற

நூலை எழுதி வெளியிட்டார். அதில் கசப்பும் இனிப்பும் கலந்த அனுபவ வெளிப்பாடுகள் இருந்தன.

அதுபோல ஒரு விழாவினை எவ்வாறு நடத்தவேண்டும் எனும் வழிகாட்டி நூலை திரு. திருச்செல்வம் அவர்கள் எழுதி வெளியிட்டால், நம்மவர் மத்தியிலும் “விழா நாகரிகம்’ வளர்ச்சியடையும்.

# இருமொழிப் புலமைவாய்ந்த இலக்கியத் திறனாய்வாளர்



எப்போதும் ஆர்ப்பாட்டமில்லாது தமது எழுத்துப் பணியை மேற்கொண்டுவந்த இருமொழிப் புலமையாளரான இலக்கியத் திறனாய்வாளர் திரு. கே.எஸ். சிவகுமாரன் தமது 86 வயதில் கடந்த மாதம் 15ம் திகதி கொழும்பில் காலமானார். கிழக்கிலங்கையை பிறந்தகமாகக் கொண்ட இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி.

Journalism, Creative writing, Film appreciation, Third world diplomacy, Film script writing, Film directing, Sub-editing, News presentation, Development communication ஆகிய துறைகளில் கற்கை நெறிகளை மேற்கொண்ட சிவா இவைகளை நடைமுறையிலும் கையாண்டு வெற்றி கண்டவர்.

இவரது பிரதான இலக்கியப் பணியாக ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களையும் அவர்கள் படைப்புகளையும் தொடர்ச்சியாக ஆங்கில உலகுக்கு அறிமுகம் செய்ததாக அமைந்தது. சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் தொடர்ச்சியாக இதற்கான ஒரு பத்தியை முழுமையாகப் பயன்படுத்தி வந்தார். தமிழர் தகவலின் பல ஆண்டு மலர்களை இப்பத்தியில் இவர் எழுதி வந்ததை இங்கு குறிப்பிடுவது முக்கியம். Thamil writings in Sri Lanka, Aspects of culture in Sri Lanka ஆகிய இவரது இரு நூல்களும் வரலாற்றுப் பதிவுகள். சிவகுமாரன் கதைகள் என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 1970ல் வெளியானது. தமிழிலும் ஆங்கிலத்திலும் இருபதுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார்.

1967களின் பிற்பகுதியில் இவருடனான எனது நட்புறவு ஆரம்பமானது. தினகரன் ஆசிரிய பீடத்தில் நான் பணியாற்றியபோது அது இலக்கிய உறவாக இறுக்கமானது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவில் இவர் கடமை ஆசிரியராக பணியாற்றிய வேளை அவர் அருகிலிருந்து நான் பணியாற்றியதும் அவரைப் புரிந்து கொண்டதும் வித்தியாசமான அனுபவம்.

கொழும்பின் அச்சு ஊடகங்கள் பலவற்றின் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றியு - ள்ளார். இலக்கிய எழுத்துப் பணிகளுக்காக 2003ம் ஆண்டு திரு. சிவகுமாரன் தமிழர் தகவல் விருதும் தங்கப் பதக்கமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். இவரது மனைவி புஷ்பா ஓய்வுபெற்ற ஆசிரியர். தற்போது கொழும்பில் வசிக்கிறார். புதல்வர்கள் இருவரும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் வசிக்கின்றனர். சிவகுமாரன் அவர்களின் மறைவினால் இலக்கியத் திறனாய்வுப் பரப்பு பாரிய இழப்பைச் சந்தித்துள்ளது **- எஸ்தி.**


**தமிழர் தகவலை தபாலில் பெறலாம்**

கடந்த 32 ஆண்டுகளாக மாதந்தோறும் ஐந்தாம் திகதி தவறாது வெளிவந்து கொண்டிருக்கும் தமிழர் தகவலை முத்திரைக் கட்டணத்தைச் செலுத்தி தபால் மூலம் பெறமுடியும்.

விபரங்களைப் பெற: **416 920 9250**

tamilsinfo@sympatico.ca


நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
Best Caters
in Town
NANTHA TAKEOUT
& CATERING
TAKE YOUR FAVOURITE MEAL
AT OUR RESTAURANT
Bridlewood Mall
UNITS 105 & 106 - 2900 WARDEN AVE,
SCARBOROUGH, ON M1W 2S8
Middlefield & Steeles
UNIT 2 - 2002 MIDDLEFIELD RD
MARKHAM, ON L3S 1Y5
Kipling & Steeles
UNITS 17 & 18 - 5010 STEELES AVE W,
ETOBICOKE, ON M9V 5C6
OPENING SOON
2200 BROCK ROAD,
PICKERING
2900 MAJESTIC CITY MALL
16-9 FOOD COURT
416 - NANTHA - 1
416-626-8421
nanthacatersinc@gmail.com

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters


உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics  * Implants  * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில்
பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# நீரிழிவு வராமல் தடுக்கும் பசிய இலைவகைகள்

"சீனி சாப்பிடாவிட்டால் நீரிழிவு வருத்தம் வராதுதானே". நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒருவர் மனைவிக்கு அளித்த விளக்கம் அது.

"தாய் தகப்பனுக்கு இருந்தால்தான் பிள்ளைகளுக்கும் வரும்." என்றார் மற்றொருவர்.

நீரிழிவைத் தடுப்பதற்கான வழிமுறைகளாக ஒவ்வொரு - வரும் தாம் நினைத்ததை எல்லாம் சொல்கிறார்கள்.

ஆனால் சீனி சாப்பிடாவிட்டாலும் வருகிறது. பரம்பரையில் இல்லாவிட்டாலும் வருகிறது. அப்படியானால் தடுப்பது எப்படி?

போஸாக்குள்ள உணவாக உட்கொள்ளல். ஆனால் இது சீனியைத் தவிர்ப்பது என்று அர்த்தம் அல்ல. தினசரி உடற்பயிற்சி செய்தல் அல்லது உடல் உழைப்பில் ஈடுபடுதல். உடல் எடையை சரியான அளவில் பேணுதல் எனச் சுருக்கமாகச் சொல்லலாம்.

போசாக்குள்ள உணவு என்பது என்ன? இனிப்பு, எண்ணெய், நொறுக்குத் தீனி போன்றவற்றை மிகக் குறைவாக உண்ணல். மாப்பொருள் உணவை அளவோடு உண்ணல், புரத உணவுகளை தேவையான அளவில் உண்ணல், காய்கறி மற்றும் பழவகைகளை அதிகம் உண்ணல் எனச் சொல்லலாம்.

தினமும் ஒவ்வொரு பங்கும் 80 கிராம் நிறையுள்ளதாக 5 பங்கு அளவில் காய்கறிகளையும் பழவகைகளையும் உணவில் சேர்க்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்கப் - பட்ட கருத்தாகும்.

எத்தகைய காய்கறி உணவுகள் நீரிழிவு வராமல் தடுக்க உதவும் என்பது அடுத்த கேள்வியாக இருக்கும்.

மாப்பொருள் குறைந்த அளவுள்ள காய்கறிகள் நல்லது. கிழங்கு வகைகளில் மாப்பொருள் உள்ளதாயினும் அவற்றில் நார்பொருளும் நீர்ச்சத்தும் அதிகம் இருப்பதால் அளவோடு உண்பதில் தவறில்லை. ஏனைய காய்கறிகளில் மாப்பொருள் குறைவாகவும், நார்ப்பொருள் அதிகமாகவும் உள்ளதால் நல்லது. இலைவகைகள் மேலும் சிறந்தவை என்கிறார்கள்.

பச்சை நிறமான இலைவகைகள் அதிகளவு உட்கொள்ளும் உணவு முறையானது நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத் தைக் குறைக்கிறது என University of Leicester ஐச் சார்ந்த Patrice Carter தலைமையிலான ஒரு ஆய்வு கூறியது. ஆறு ஆய்வுகளின் முடிவுகளை மீள்பரிசோதனை செய்தபோது இது தெரிய வந்ததாம்.

ஏனைய காய்கறிகள் உண்பவர்களை விட அதிகளவு பச்சை நிறமான இலைவகைகளை உண்பவர்களுக்கு மட்டுமே நீரிழிவு வருவதற்கான சாத்தியம் 14 சதவிகிதம் குறைவு என அது கூறியது. இது 13 வருடங்களாக 223,000 பேரிடையே செய்த அவதானிப்பின் முடிவு.

ஆனால் ஏனைய வகை காய்கறிகளையும் பழங்களையும் அதிகம் உண்பவர்களிடேயே இந்த நீரிழிவுக்கு எதிரான சாதகமான பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை.

இதன் அர்த்தம் ஏனைய வகை காய்கறிகள் பழங்கள் பயனற்றவை என்பது அல்ல. ஏனைய பல ஆராய்ச்சி முடிவுகள் எல்லாப் பழவகைகளும், காய்கறிகளும் நீரிழிவைத் தடுப்பதில் பங்களிப்பதுடன், இருதய நோய்களுக்கான சாத்தியத்தையும் குறைப்பதாகக் கூறுகின்றன. ஆயினும் இலைவகை உணவுகளின் பங்களிப்பு அதிகம் என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது.

**இலைவகை உணவுகளின் நற்பயனுக்குக் காரணம் என்ன?**
ஒட்சிசனெதிரிகள் காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். பசுமையான பச்சை இலைகளில் பீற்றாகரோட்டின், பொலிபீனோல்ஸ், விட்டமின் சீ போன்ற ஒட்சிசனெதிரிகள் மற்றும் மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்களும் தாராளமாக இருப்பதே காரணம் எனலாம்.

**பசிய இலை வகை உணவுகளின் போசாக்கு:**
இலைவகைகள் மிகக் குறைந்தளவு கலோரிப் பெறுமானம் உள்ள உணவுகளாகும். அவற்றிலுள்ள மாப்பொருள்களானது நார்ப்பொருள்களிடையே அடைபட்டு இருப்பதால் எளிதில் சமிபாடடைவதில்லை. இதனால் நீரிழிவு நோயாளர்களின் இரத்த குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதைக் குறைக்கினறன.

இரும்பு, கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் போன்ற கனியங்கள் உண்டு. விட்டமின் D வகைகளுடன், விட்டமின்கள் K, C, E ஆகியவை நிறையக் கிடைக்கின்றன. ஒரு கப் சமைத்த இலையுணவு ஒரு மனிதனுக்கு தினசரி தேவைப்படும் விட்டமின்கள் K யைவிட 9 மடங்கு அதிகமாகக் கொடுக்கும் எனத் தெரிகிறது.

பீட்டாகரோட்டின், லியுடின் (beta-carotene, lutein, and zeaxanthin) போன்ற பைட்டோநியுரியன்டசை (phytonutrients) இலைவகை உணவுகள் தருகின்றன. இவை எமது உடற்கலங்கள் சேதமாவதைத் தடுக்கின்றன. வயது அதிகரிப்பால் ஏற்படும் பார்வை இழப்பை (Age related macular degemeration) தடுப்பதிலும் இவை உதவுகின்றன.

கொலஸ்டரோல் குறைப்பு, இருதய நோயிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றிற்காக இப்பொழுது ஒமேகா 3 என்ற கொழுப்பை பலரும் பயன்படுத்துகிறார்கள். இது பெருமளவு ஆழ்கடல் மீன்களிலிருந்தே பெறப்படுகின்றது. ஆயினும் தாவர இலை உணவுகளிலும் இது சிறிதளவு காணப்படுகிறது.

குருதி உறைதலைக் கட்டுப்படுத்துகின்றது. மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை ஏற்படுவதற்கு குருதி உறைதல் முக்கிய காரணமாகும். மருத்தவ ரீதியாக இதைத் தடுப்பதற்கே குறைந்த அளவு அஸ்பிரின் (75-100mg) மற்றும் குளபிடோகிரில் போன்ற மருந்துகளை நீண்டகால அடிப்படையில் கொடுக்கிறார்கள். தாவர இலை உணவுகளில் உள்ள விற்றமின் கே இயற்கையான பாதுகாப்பைக் கொடுக்கும்.

விற்றமின் கே ஒஸ்டியோபொரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. இன்று வயதான பலரும் முக்கியமாக பெண்கள் இதனால் பாதிக்கப்படுவது தெரிந்ததே. தாவர இலை உணவுகளை தினமும் உபயோகித்து வந்தால் ஒஸ்டியோபொரோசிஸ் வருவதிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கும்.

அழற்சியைத் தடுக்கும் குணம் விற்றமின் கே க்கு இருப்பதால் மூட்டு நோய்களிலிருந்து பாதுகாக்கும்.

இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவதை தடுக்கும் ஆற்றலும் விற்றமின் கே க்கு உண்டு.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

